உ

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# நாலுகாண்டஜாலம்

## ௲௨௱-ல்

## முதற்காண்டம் - வயித்தியம் - ௩௱.

இஃது,

தஞ்சைமாநகரம் மகாராஜாசமஸ்தானத்து

வயித்தியர் காதர்சாகிபு

களையாங்குட்டை ஆயுள்வேதபண்டிதர்

**இலட்சுமணநாயகர்**

பட்டாளம்

**கனகசபைபண்டிதர்**

இவர்கள்முன்னிலையில்

மதுரை புதுவை சென்னை இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

களத்தூர்

**வேதகிரிமுதலியார்**

குமாரன்-ஆயுள்வேதபாஷ்கரன்

**கந்தசாமிமுதலியாரால்**

பற்பலஏட்டுப்பிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து

புரசைப்பாக்கம்

**ஏழுமலைப்பிள்ளையவர்களால்**

தமது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது

பிரபவஹு.

REGISTERED COPY RIGHT.

1868.

# விளம்பரம்.

இதனல் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில், ௲௮௱௪௰௭ (௨௫-வது) ஆக்டின் (௨௰-வது) பிரிவினில் (௬-வது) விதியின் பிரகாரம் காப்பிறயிட் பெற்றிருக்கிறபடியால், இதை ஒருவரும் அச்சிடவுங்கூடாது, மற்றொரு பாஷையிலு மொழிபெயர்க்கக்கூடாது, அப்படிக்குப் போடுவாராகில் மேற்கண்ட ஆக்டில் செப்பியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய்த் தண்டனை விதிக்கப்படும்.

இப்போதுபதிப்பித்திருக்கும்

புத்தகங்களாவன.

| | |
|---|---|
| தேரையர்வயித்தியம் | ரூ௧ |
| அகஸ்தியர்நாலுகாண்டஜாலம் | ரூ௨ா |
| போகமுனிவர்சரக்குவைப்பு | ௮ா |

இனிமேல் பதிப்பிக்கப்படும்

புத்தகங்களாவன.

| | |
|---|---|
| கருவூரார்திரட்டு | ௫ா |
| கருவூரார்பெருநூல் | ரூ |
| இராமதேவர்காவியம் | ரூ |
| இராமதேவர்சாலம் | ௫ா |

இவை தேவையுள்ளவர்கள் சென்னப்பட்டணத்துக் கடுத்த சூளை நாராயணன் பாளையம் (௪௨-வது) கதவிலெக்கமுள்ள வீட்டில் விவேகவிளக்க அச்சுக்கூடத்தின் தலைவர், பு-ஏழுமலைப்பிள்ளையவர்களிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சிவமயம்.

# பொருளடக்கவகாரதி.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| அழுகண்ணிக்குழம்பு | ௪௬ | கூர்மன்-சமானன்-அபானன்-தேவதத்தன்-தனஞ்சயன்-இவைகளின்லக்ஷணவகுப்பு. | ௯ |
| அழுகண்ணி தொழுகண்ணிவேதை. | ௪௯ | கெந்தகச்சுன்னம் | ௰௯ |
| அநுமன்பூசை | ௰௨ | கெவுரிபாஷாணமெழுக்கு | ௨௭ |
| அஷ்டகர்மம் | ௫ | கொங்கணர்மையின்பெரு | ௫௯ |
| ஆக்ருஷணம் | ௫ | கொடிப்பைகற்பம் | ௪௫ |
| இரசச்சுன்னம் | ௰௮ | கோரக்கர்மையின்பெருமை | ௫௮ |
| இராமபாணசெந்தூரம் | ௰௬ | சகலரோகத்திற்குமெழுகு | ௫௰ |
| உப்புகற்பம் | ௪௪ | சகலத்துக்குமையின்பெரு | ௨௫ |
| உந்திமந்திரம் | ௫௧ | சகலரணத்திற்குமருந்து | ௪௭ |
| உச்சாடனம் | ௫ | சயரோகத்திற்குத்தயிலம் | ௭ |
| எலுமிச்சம்பழக்கற்கம் | ௰௪ | சன்னிக்குநசியம் | ௬ |
| ஏவல் பில்லிசூனியத்திற்கு மருந்துலேகியம். | ௪௧ | சாரணைகற்பம் | ௬௫ |
| ஓமத்தூளின்களி | ௪௪ | சர்வமேகரோகராஜாங்கத்த | ௨௯ |
| கருநாபிச்சுன்னம் | ௰௮ | சிரநோய்க்குமந்திரம் | ௫௰ |
| கர்மதர்மம் | ௰௭ | சிலந்திமந்திரம் | ௫௧ |
| கண்ணோய்க்குமந்திரம் | ௫௰ | சின்னிக்கியாழம் அனுபான | ௰௯ |
| கவுதும்பைகற்பம் | ௪௪ | சீனிலேகிய அனுபானம் | ௰௧ |
| கருவூரார்மையின்பெருமை | ௫௮ | சூரியபூசை | ௰௪ |
| கயிலாசர் சட்டநாதர்மையின்பெருமை. | ௫௯ | சூலைரோகத்திற்குத்தயிலம் | ௬௭ |
| காந்தபற்பம் | ௨௰ | செயராமபாணம் | ௫௬ |
| காந்தக்கற்பம் | ௰௪ | தலைமுழுகுந்தயிலம் | ௨௬ |
| காப்பு | ௧ | தலைவலிக்குமந்திரம் | ௫௰ |
| கிரகசாரம் | ௪௭ | தயிலம் | ௫௯ |
| கீழ்க்காய்நெல்லிலேகியம் அனுபானம் | ௰௧ | தாளிசப்பத்திரி சூரணத்தில் அனுபானம். | ௰௬ |
| குன்மத்துக்குமந்திரம் | ௫௰ | திருமூலர்மையின்பெருமை | ௫௮ |

| பெயர். | பக்கம். |
|---|---|
| திரிலோகலேகியம் | ௯ |
| திருஷ்வியாதி | ௬ |
| திருஷ்வியாதி | ௰௧ |
| திருஷ்வியாதி | ௪௨ |
| திருசிவேதை | ௪௬ |
| துடைவாளைசிலந்திக்கு அனுமன்மந்திரம். | ௩௩ |
| தைவேளைக்கற்பம் | ௬௩ |
| தோட்சிலந்திப் புடைகளுக்குவீரபத்திரமந்திரம். | ௩௨ |
| நாசிசெவிநோய்க்குமந்திரம் | ௩௰ |
| நாசிகாசிகைக்ஷ | ௨௬ |
| நிலவாகைகற்பம் | ௪௩ |
| நூல்பார்க்கவிதி | ௮ |
| நூலின்பெருமை | ௨ |
| நோய்பிறக்கும்விதம் | ௫ |
| பச்சைவெட்டுக்கு ரத்தநாங்கதமெழுகு. | ௪௧ |
| பண்டிதர்சாபம் | ௮ |
| பனவெல்லம் அனுபானம் | ௨௰ |
| பயித்தியத்திற்குச் சஞ்சிதத்தயிலம். | ௩௭ |
| பாஷாண மெழுகுவேதை | ௩௩ |
| பிண்டமெழுகு | ௨௬ |
| பிண்டநெய் | ௨௭ |
| புண்சிரங்குக்கு அனாயாப்புக்குமந்திரம். | ௩௨ |
| பூரணச்சந்திரோதயமாத்தி | ௩௬ |
| பேதனம் | ௪ |
| பொரியனுபானம் | ௨௰ |
| மச்சமுனி-போகர்-லாடரிஷி-வேதமுனி-ரோமரிஷி-வாசமுனி- கமலமுனி-சுந்தராநந்தர் - அகப்பைசித்தர் - அழுகண்ணர்-புண்ணாக்கீசர்-இவர்களின் மையின்பெரு | ௩௯ |
| மனோன்மணிப்பிரசன்னம் | ௮ |
| மந்திரக்கியானம் | ௰௪ |
| முகத்துவியாதிக்குமந்திரம் | ௩௧ |
| முதுகுவியாதிக்குமந்திரம் | ௩௨ |
| மூலிமாத்திரை கற்பம் | ௫ |
| மூலிகைகற்பம்அவரிகற்பம் | ௪௩ |
| மேகராஜாங்கலேகியத்தில் அனுபானம். | ௰௬ |
| மேகரணங்களுக்குஆக்கிராணைக்குளிகை. | ௭ |
| மேனிகற்பம் | ௪௩ |
| மோகனம் | ௩ |
| லிங்கப்புத்துக்குமந்திரம் | ௩௩ |
| வகாரவேதை | ௪௫ |
| வகாரவேதையின்பெருமை | ௪௰ |
| வழலைக்கற்பம் | ௨௩ |
| வயித்தியமுறை | ௪ |
| வயிரவர்பூசை | ௰௨ |
| வாதப்பித்தச்சிலேத்துமத்துக்குகிரிகையும் அவிழ்தமும். | ௩௩ |
| வாந்திபேதி சகலவியாதிக்குமந்திரம். | ௩௧ |
| வித்துவேஷணம் | ௩ |
| விமலாதிலேகியம் | ௰௫ |
| விநாயகர்பூசைமந்திரம் | ௩௧ |
| விஷமுஷ்டித்தயிலம் | ௨௫ |
| வெள்ளிசெந்தூரம் | ௩௪ |
| ஜண்டமாருதம் | ௰௭ |


பொருளடக்கவகராதி

முற்றும்.

உ

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த

# நாலுகாண்ட இந்திரஜாலம்

## ௧௨௱-ல்

## முதற்காண்டம்-வயித்தியம்-௩௱.

### காப்பு.

காரணமேமூலவட்டந்தன்னில்நிற்குங்
    கணபதியும்வல்லபையுந்தேவர்காப்பு
பூரணமாம்பராபரையுஞ்சிவனும்நந்தி
    பொருந்திநின்றபஞ்சகர்த்தாகணங்கள்காப்பு
வாரணத்திலேறிவிளையாடுமெந்தன்
    மன்னுகுருவருள்சிறந்தகுமரன்காப்பு
நாரணனும்நான்முகனுமறியாநின்ற
    நலமானவேதாந்தக்காப்புத்தானே. (௧)

தானென்றஆணுவத்தைவிட்டுநீங்கிச்
    சகலபதபுவனமெல்லாந்தாண்டிநின்று
வானென்றஅகண்டவெளிதன்னிற்புக்கி
    வடிவானபரஞ்சோதிதன்னைக்கண்டு
ஊனென்றஉடல்தனையேசுட்டுநீற்றி
    உண்மைபெற்றபெரியோர்க்காய்உரைத்தேநீது
கோனென்றகுருபதத்தைப்போற்றிநின்று
    குடிலங்கள்தனையகற்றிநிலையில்நில்லே. (௨)

நில்லப்பாபலநூலுங்கலந்துபார்த்து
    நிஜமானரிஷிசித்தர்பாடல்தேர்ந்து
வெல்லப்பாசொல்லிவிட்டேன்சகலசித்தும்
    வெளிவிடாதடக்கினவனவனேசித்தன்
நல்லப்பாநானுரைத்தமாத்தரீகம்
    நலம்பெறுமெண்ணாயிரமாய்நவின்றநூலை
வல்லப்பாவதைக்குறுக்கியிந்திரஜாலம்
    வகையிதுவாயிரத்துஇருநூறுஞ்சொன்னேன். (௩)

சொன்னதொருதிருமூலர்போகநாதர், தூடியானகொங்கணருங்கருவூராரும், நன்னயமாய்ப்பதினெண்பேர் சித்தரெல்லாம், நலமாகப்பாடிவைத்தமறவுபாஷை, பின்னமன்றியான்சொன்னேன்புலத்தியனேகேளு, பெருநூலைக்குறுக்கியது திறமாய்ச்சொன்னேன், பொன்னிதனைப்போல்வைத்துப்பதனம்பண்ணு, புகழ்பெரியயிந்திரமாஞ்சாலந்தானே. (௪)

தானுனமுன்சொன்ன பூசைவிதிதீக்ஷை, சம்பிரதாயம்பூரணசூத்திரனப்பா, வாமென்று ஞானமொழி வயித்தியமுஞ்சொன்னேன், வகையாகஅதற்கெல்லா மிந்நூல்வேண்டும், கோனென்ற மந்திரமுந்தந்திரமுஞ்சொன்னேன், குசலமன்றிகாயசித்தி வாதஞ்சொன்னேன், கானென்றுஅலையாதே யிந்தநூல்பார், கைகண்டபலனுருங்காணுந்தானே. (௫)

நூலின்பெருமை.

காணவேசொல்லிவிட்டே னிந்நூல்பாரு, கருணையுள்ளப்பெரியோர்கள் சித்தர்க்காகும், தோணவேயிந்நூலை வெளியிற்போட்டால், துலையாதபாவம்வந்துநரகில்வீழ்வாய், பூணவேயிந்நூல்தானுலகிற்கிட்டா, பொன்கோடியீந்தாலும்வெளியிற்சொல்லார், ஆணுவமாய்ப்பாடிவிட்டேனிந்தநூலை,ஆருக்குந்தெரியாமலடக்கிப்போடே. (௬)

அடம்பெரியசொன்னதொருமாந்தரீகம், அறையில்வைத்தப்பொருளர்ச்சுசாலவித்தை, தடம்பெரியரிஷிகளெல்லாம் என்மேற்சண்டை, தானிட்டார்வெளியாகச் சொன்னீரென்று, திடம்பெரியசித்தர்களைவணங்கியுன்னால், செப்பினேன்புலத்தியனே திறமிதாச்சு, சடந்தனக்குஉறுதியிதேயுலகிலீந்தால், சண்டாளனுவாய்நீசாபந்தானே. (எ)

சாபந்தான்போட்டுவிட்டேன் யோகிக்கீவாய், தனங்கோடியீந்தாலுமவர்க்கியாதே, பாவந்தான்வந்துவிடும் உனக்குத்தானும், பலியாதுயிதிலுள்ள கருக்களப்பா, கோபந்தானறிவிடு மறவில்நில்லு, குருபதத்தைநிழலென்றுகொண்டுதேறு,நீபம்போல்பொருள்பசிக்கமில்லாமற்றுன், செப்பினேன்ஜாலமென்றதிரட்டிதாமே.

திரட்டிவைத்தேன்பலநூலுமாய்ந்துபார்த்துச்செப்பினேன் மறைத்ததெல்லாமிதிலேதோன்றும், மொட்டிவிட்டுமாய்கையெல்லாமிதனைப்பாரு, வேதாந்தஞ்சித்தாந்தமிரண்டுந்தோன்றும், மருட்டிவிட்டார்சித்தரெல்லாமாந்தரீகம், வகையாகச்சொன்னார்களில்

லையப்பா,பொருட்டாகப்பொருள்பறிப்பாருலகத்தோர்கள்,பொன்போலேயிதனைவைத்துப்பதனம்பண்ணே. (௯)

## அஷ்டகர்மம்.

பதனமாய்ச்சொல்லுகிறேனஷ்டகர்மம், பண்பாகக்கேள்மகனேபுலத்தியனேஐயா, அதனமாய்ச்சொல்லுகிறேன்ஸ்தம்பனந்தானப்பா, அறைகிறேன்ஓம்ஆம்அவ்வுயவசிநமவென்று, வதனமுறுவாலையுடன்லக்ஷமுருமாட்டுமைந்தனேஸ்தம்பனந்தான்சித்தியாச்சு, அதிகமாம்பூசைவிதியிருநூறினுள்ளே, அஷ்டகர்மம்விதித்துணாத்தேனதனைப்பாரே. (௰)

## மோகனம்.

பாரப்பாமோகனத்தைச்சொல்லக்கேளு, பனைமூலங்கணபதியின்மூலங்கூட்டி, நேரப்பானயவசிமஎன்றுதானும், நேராகவாலையுடன்லக்ஷமேற்று, காரப்பாகுருபதத்தைவணங்கிநன்றாய்க், கருணையுடன்நடுவணையிற்கண்ணூட்டம்பாரு, ஆரப்பாஉனக்கீடுஉலகிலுண்டோ,அருமையுள்ளபோகர்மைந்தன்கடைக்காண்டப்பாரே

## உச்சாடனம்.

காண்டமுடன்கோர்வைநூல் தொகையாய்ப்பார்த்து, கலைவகுத்துநீபேசிமூலங்கூட்டி, நீண்டகலசிமநயவவென்றுதானும், நிருவாணமாயிருந்து லக்ஷமோது, ஆண்டவனேயோட்டிவிக்கு மிவைநூல்போலே, அகலுமுச்சாடனத்தைச் சொல்லாதப்பா,மூண்டவகைபூசைவிதி மூலம்பாரு, மூட்டுமடாயினம்பிரிக்குங் கருவைக்கூட்டே. (௰௨)

## ஆக்ருஷிணம்.

கருவென்னஅளப்புக்கு வயணங்கேளு, கமலமகள்மூலமுடனரியின்மூலம், குருவென்னவயநசிமவென்றுமாறு,கும்பகத்தில்நடுமூலங்கூட்டியோது, அருவென்னயிதுவேஆக் கிருஷிணமாச்சு, ஆயிரத்திருநூறுஅதிகமாச்சு, உருவென்னஆடிமூலம் யிருத்திவோது, உத்தமனேபூரணசூத்திரத்தைக்கேளே. (௰௩)

## வித்துவேஷிணம்.

கேளுமேவித்துவே ஷிணத்தைப்பாடக், கிரிகையிலேஆதிகுருமூலத்தோடே,வாளுமேசத்திசிவமூலங்கூட்டிவமயசின-ரீறி-ரீறியென்றுஓது, நாளுமேயிதுவல்லோ அஷ்டசித்தி, நாடுமடாவித்துவேஷிக்கப்பாரு,கோளுமேவாராதுஉனக்குவிந்து, குருவிருந்துலவிக்குமடா லக்ஷமோதே. (௰௪)

## பேதனம்.

ஓதினேன்பேதனந்தான் அனந்தனந்தம், உரைப்பாடல்தீக்ஷை விதிபூசைபாரு, வீதிபோலந்நூலு மிந்நூலுஞ்சேர்த்து, விபரமா யுருவேற்ற மிகவுமோக்ஷம், சாதியேசத்தசா கரத்தின் மூலம், தனை ச்சேர்த்துவயசிநம வென்றுமாறு, சோதியுடபாவிசனு செப்பிர லக்ஷம், சொல்லுவீரிந்திரமாஞ்ஜாலமீதே. (௰௫)

மீதென்னசங்காரங் கேளுநீயும், விடுமூலங்கொண்டுசெவி லக்ஷமேற்று, வாதமென்னவமசிநய வென்றுகூறு, மாரணமாங் கருவிகரணுதிநீறும், நாதமென்னவிந்துவென்ன ரண்டுஞ்சேர்ந் தா, லா-வா-வா-ங்கென்றுகூறுமாறு, பூதமென அஞ்சுக்கும்நமநீத ப்பா, புரியஷ்டங்கலைவகுத்துப்போகும்பாரே. (௰௬)

போகாதுகலையாறு இரண்டுநாலு, புலத்தியனேசகலவசிகர த்துக்கெல்லாம், மேகாசட்டாமூலவிந்துமூல, மென்னுத்தாள்நா தாந்த மூலங்கூட்டி, போகாதவப்புனலைவசிமநயவென்று, பூலோ கவசியமது பூரணமேயாகும், சாகாதகால்வேகாத் தலையுமாச்சு, சதாசிவனுர்வயித்திய பாகத்தைக்கேளே. (௰௭)

## வயித்தியமுறை.

பாகத்தையறியார்க ளிந்திரஜாலம், பார்ப்பதற்குபரதவிப் பார் பண்டிதாக்கள், நாதத்தைவிங்களிப்பாரதுபோகத்தில், நம ஸ்காரஞ்செய்வார்க ளாத்தர்தன்னை, மோகத்தில்கும்பிடுவார்விந் துவாங்கார், மூடரப்பாசெத்தார்க ளனேகமுண்டு, காரத்தையறி யாமல்மருந்துபாகம், கண்காணகைகண்ட வயித்தியோர்க்கே(௰௭)

வயித்தியநூலனேகமுண்டு லோகத்துள்ளே, மாதவத்தோர் பாடிவைத்த மாத்திரைதானப்பா, சயித்தியமாய்ப்போனவழிஎதி னுலே, சவுக்காரத்துறைதனையை விட்டதாலும், பயித்தியங்கொ ண்டபானவழி வாய்வுபுக்கி, பாழானசூடுகொண்டு மேகமீறி, நயி த்தினதுதுறைதோறும் சாம்பமப்பா, நான்சொன்னபண்டிதமே நடக்குமாற்கம். (௰௯)

மாற்கமென்னயென்னுத்தாள் மானங்காப்பு, வடிவிலுருவா னசிவ மதுவேகாப்பு, தீற்கமென்னகவித்தகண பதியேகாப்பு, செ ங்கமலம்போலிருந்த மாய்கைகாப்பு, ஆற்கமென்ன ஆயிரத்தெட் டிதழாய்நின்ற, அல்லியிருளிறையதா மறையேகாப்பு, ஏற்குமு ருபுலத்தியனே அஷ்டசித்துக், கிந்நூலிவிந்திரமாஞ்சாலமாடே()

ஆடப்பாவகாரமொருநூறும்பாரு, அப்பனேசரக்குஅறுநூ றும்பாரு, வீடப்பாசெந்தூர மூந்நூறுள்ளே, விபரிதங்கள்வா

ராது வேதாந்தம்பாரு, ஆரப்பாஆயிரகாண்டத்தைப்பாரு, அதி
னுள்ளேபண்டிதங்க ளனேகருண்டு, தேடப்பாஇந்நூலைத் தேடு
தேடு, செகஜாலமாடுமடா பாருபாரே. (௨௧)

பாரப்பாபூரணத்தைச் சொல்லக்கேளு, பதியிருந்தஞான
வெளிமூலாதாரம், சீரப்பாவயித்தியத்தில்ரண்டுலக்ஷம், தீர்க்கமடா
பரிபாஷைவாதங்கோடி, ஆரப்பாகாண்பரிதுதேசத்தோர்கள், அ
றிவாரோமருந்துவகைவிபரங்கோடி, பேரப்பாபொன்போல வி
ந்நூலப்பா, பிழைப்பதற்குவாதசிலேற்பனத்தைக்கேளே (௨௨)

### நோய்பிறக்கும்விதம்.

### கூர்மன்-சமானன்-அபானன்-தேவதத்தன்- தனஞ்சயன் இவைகளின் லக்ஷணவகுப்பு.

கேளடாஅபானனுட சமானன்கூர்மன், கிரிகிக்கவாயுவெம்
படசூடாகி, பாளடாஅன்னமது சிறுத்குன்றி, பசியன்றிநோய்க்
கொண்டுஆவல்மீறி, வாளடாஒளிகெட்டு ஆக்கைதோறும், மயமன்
றிபலன்குறைந்து வாலுளுக்குள், சூளடாவியாதிகொண்டுதோஷ
ம்புக்கி, தொல்லைபிணிசாத்தியத்தில் அசாத்தியந்தானே. (௨௩)

தானென்றதேவதத்தன்நாகனோடு, தளதளென்றதனஞ்செய
ன்ஆங்காரங்கொண்டு, ஊனென்றமலசாரத்தோடேபுக்கி, உற்றுநி
ன்றவிந்துவிலேவாய்வுசிக்கி, மேனென்றநீர்த்தோஷம்அக்கினிமாந்
தம், மிளைப்பிரும்பல்புகைச்சல்வலிகுன்மத்தோடும், வேனென்ற
ஆயிரமாம்வியாதியாகி, வித்திட்டுமுளைத்தாப்போல்சூலையாமே ()

சூலையென்றும்மேகமென்றும்வாதமென்றும், சூடென்றும்கிரந்
தியென்றும்பரங்கியென்றும், மூலமொடுபதினெட்டு ரோகமென்
றும், முனையானகுஷ்டமென்றும்பெருநோயென்றும், ஆலயமே
குடிகொண்டுசடத்தைத்தொட்டு, அளவறந்தபிணியானதேதுகர்ம
ம், வேலையிலேயநுபோகமீறிச்செய்யும், விதிப்படியாமிதுவெல்
லாங்கிரிகைதானே. (௨௫)

கிரிகையுள்ளபிராணனோடுசாக்கிராணம், பிரிதியுள்ளநிராதார
ம்சொர்க்காரனோடு, அரியயிலேபரவைமூன்றும் வாயுவாலே, அ
கோரத்தீக்காடாட்சிபூதமைந்தும், வெரியிருந்தகுளவிபோல் கூ
டுவிட்ட, விதம்போலேபிணிமிகுந்து அலையும்பாரு, நெரியவினை
யிதுகளுக்குவியாதிதீர, நினைத்தபடிமுடியாதுஅபானன்வாதம் ()

வேறு. (மூலிமாத்திரை கற்கம்.)

வாதமாம்வாதபித்தம் வன்னையபிராணன்மூன்றும்
சீதமாம்வாதபித்தம்சிறந்தசிலேற்பனமும்பாரு

ஆதாரமூலிபோக்கு அவுரியின்மேனிச்சாறு
சூதமுந்துமட்டிம் வளைசூரிவேர்கொத்தான்சாறே. (௨௭)

வேறு.

சாரானதித்தனையுஞ்சூரிவேரும், சாந்தகமாம்காந்தமொடுவீ ரத்தோடு, வீராதேகருணாபி பலமேபத்து, வீரமதுபலம்பத்து காந்தம்பத்து, ஆரானசூரிவேர்பலம்பத்தப்பா, அந்தவகையிருப் பவல்தான்பலம்பத்தப்பா, சூராகயிவையெல்லாம் சமனாய்ச்சேர் த்து, சுகமாகநாளொன்றுக்கரைத்துருட்டே. (௨௮)

அரைப்பதுவேமைபோலே அரைத்துக்கட்டி, ஆத்தாட்குவ டுகேனாக்கும்பூசைசெய்து, விரைத்தபயரளவுருட்டிநிழலுக்குள்ளே, விரைபோலேகலகலெனஉலர்ந்தபின்பு, முறைப்படியேசெப்பினி லேஅளந்துபோட்டு, மூவருடநாடிக்குமுனைநோய்க்கண்டு, உரை ட்பதுவேவென்னீரிலுண்டையொன்று, உரைத்திட்டால்சட்லத்து ள்வியாதிபோமே. (௨௯)

தீரும்வியாதி.

போமேதான்சாமசாமிரண்டிலொன்று, பூரணமேசாத்தியத் தால்வந்ததெல்லாம், சாமேதானிந்தமருந் தென்றிடாதே, தாது விர்த்தியுண்டாகுஞ்சன்னிதீரும், மாமேகப்பிரவாதங்கிராணிதீரும், மதிசாரமகோதரங்களெல்லாந்தீரும், பூமேவுஞ்சூலையென்னுமூல ந்தீரும், பிளவையரையாப்பதிலேபூண்டுபோமே. (௩௧)

பூண்டுபோமேற்கண்ட வியாதிக்கெல்லாம், புண்ணிலேவா னீரிலுரைத்துப்பூச, தூண்டுவார்வென்னீரிலுள்வியாதிசூரை, தூடி யுடனேமண்டலங் காலதாக்கு, வேண்டுவாருலகத்தோர் சித்தரெ ன்பார், விருதுபெற்றவயித்தியர்களிந்திரசாலம், மூண்டுபார்மா த்திரைமூன் றூட்டும்போது, முனைநாடியிம்மென்றுலட்சமோதே.

லட்சமடா மூன்றுவகைசுரமுந்தீரு, மலமிறுகல்வந்தபிணி யகன்றுபோகும், பட்சமாம்பராசத்திஉன்மேலப்பா, பார்க்கையி லேசுழிமுனையைப் பற்றிநில்லு, உச்சமாங்கற்பத்துக் குறுதிகேளு, உகாந்தவரைமனமிருந்தாலுடனேசித்தி, மச்சமாம்புலால்நாற்ற மாகாதப்பா, மைந்தனேசன்னிக்குநசியஞ்செய்யே. (௩௨)

சன்னிக்குநசியம்.

செய்வதுவேநிம்பெண்ணைஅகத்திச்சாறு, சிறுகுளிகைஒன்று பொடித்திதனைவாறு, நைவதுவேகண்ணிலேஉரைத்துப்போடு, நல மாகச்சன்னிபதிமூன்றுந்திரும், வைவதுவேகுருவுக்குமோக்ஷமாகு ம், வலுமணிக்குகுருசரணம் வந்துமாற்றும், செய்வதுவேசகலசு ரஞ்சன்னிவிச்சு, தீருமடாமூலிகையின்குளிகையாலே. (௩௩)

## மேகரணங்களுக்கு ஆக்கிராணக்குளிகை.

குளிகையென்னபுண்பிளவை சுரங்கள்சன்னி, குணமாகுமெ நீதந்தநோயாறுனும், வழியோடேமுடக்குநோய்சூலரோகம், வந் தவந்தமேகமென்றமணிகட்கெல்லாம், விழிமூடிபுகைகாட்ட வய ணங்கேளு, மிகவளர்ந்துதிரைக்குள்ளே கரண்டித்தீயில், குளிகை யஞ்சுபொடித்திட்டு புகையைக்காட்டு, குணமாகும்மூன்றுபுகை நாள்பத்தாமே. (௫௪)

பத்துனுள்ஜலத்தினிலே அந்திசந்தி, பதனமாய்மூழ்கிவரச் சொல்வாயப்பா, சுத்தமேயாகுமடாசொரிசிரங்கு, சூடுகொண்ட புண்புரைகளெல்லாந்தீரும், பத்தியமாய்ப்புளியுப்புரண்டுந்தள்ளு பால்கூட்டிஆவிநெய்யும் பருகச்சொல்லு, எத்தனைநோய் வந்தா லும் குளிகையொன்று, இட்டிடவேபிணிதீருமென்றுபாரே (௫௫)

என்றுபார்குன்மமெட்டுங்குப்பையாகும், இதினுண்ணஅந்தி சந்திரண்டுபோதும், மின்றுபார்நாள்மூன்றுகுளிகையாறு, வெ ட்டவெளிகுன்மநோய்ஆறுந்தீரும், குன்றுபார்சத்திகுன்மந் தீரா தப்பா, குணமில்லவலிக்குன்மங்கமனந்தீரும், நின்றுபார்லகுவி லேவியாதிபோச்சு, நீழலிலேசோகைக்கும்பாண்டுவூடே (௫௬)

வூடேதான்சோகைக்கும்பாண்டுநோய்க்கும், வுத்தமனேவெ ள்ளாட்டுக் கோமியத்தில், வீடேதான்நாள்மூன்று குளிகையாறு, நேராகம்ருந்திடவே யெங்கேபாண்டு, கூடேதான்கிருமிவிழுஞ் சோகைதீருங்,குறியாகப்பத்தியமாய்க்கொள்வாயப்பா, வீடேதா னிருந்துகொண்டுவயித்தியம்பாரு, மெல்லினமா யிம்மென்றுவி யாதிதீரோ. (௫௭)

## சயரோகத்திற்குத்தயிலம்.

தீரவேசயரோகந்தீர்ப்பதற்கு, திரிபலையுந்தேன்கூட்டி ஆறு போது, ஆரவேகொண்டுவிடு சயமாறுந்தான், அற்றுதடாமண் டலத்திலாறிப்போகும், மாரவேமாலைக்கண்படலந்தீரும், வளைந் தெழுதுகையான்சார்தனிலுரைத்து, தேரவேஅந்தியிலேயிட்டுமூ ழ்கு, தீருமடாநாள்மூன்றுதிற்கந்தானே. (௫௮)

தீர்க்குமடாநேத்திரத்தில்பதினுறுன - தீவினைகள்ஒழிந்துவிடு ம்நயனதோஷம் - ஆற்குமடாகுருவழியச்சொல்லிவிட்டேன்- ஆயி ரத்தியிருநூறினருளைப்பாரு - எற்குமடாநந்தியொளி வீசும்பாரு- இடைகலையில்சந்திரன்பாலுண்பாயப்பா -காற்குமடாஆதாரமாறு ங்கார்க்குங் - கயிலாசவீடுகிட்டுங்கருணைமேலே. (௫௯)

மேவியேதாய்பதத்தைத் தொண்டுபண்ணு - வேதாந்தநூல்வ ழியேவினாந்துபாரு - ஆவியேதழியாதுகூடேபோடு - ஆயிரத்தெ

ட்டாமேடாசித்துமாகும்-தேவியேபாணம்வைத்துப்பூசைபண்ணு சிவபிஷ்மாத்திரையைக்கண்டபோது - பாவிநீஅலையாதேவயித்தி யம்பாரு - பண்டிதமேதர்மமடாபாரின்மீதே. (சுல)

நூல்பார்க்கவிதி.

மீதானவயித்தியமோநாலாயிரத்து - வியாதிக்குமீசன்விட்டகு றையால்மேவும் - மாதாவின்கெர்ப்பத்தில்விரணஞ்சேர்ந்த -மதியி ரவிபிதாவிந்துவழியேசாரும்- சூதற்குயிந்திரியம்வினையாமப்பா- தொகுத்துரைத்தத்துவக் கட்டளையைப்பாரு - ஏதாகும்விதிவழி யேபிரமவித்தை - இமன்பதிக்கும்வழியாகுமியல்புதானே. (சுக)

பண்டிதர்சாபம்.

தாமேதான்பண்டிதசாபத்தைக்கேளு- தரணிதனில்சபையுறு சாபநிராணியென்று- போமேவுசகலபிணிநிபாரணியென்று-பூட்டு வாய்ஓமத்திலக்ஷமப்பா - நாமேதானுதியிலேபிரமவித்தை - லவிய த்தைமாத்தியது கர்மாந்திரீகம் - ஆமேரீஓமென்று கூட்டியோது- அரிஅரிரீயென்று ஆயிரந்தானோதே. (சுஉ)

தானோதுமுன்குளிகைசருவநோயும்-தாக்குமடாசாபமதுதீர் வதற்கு - வானொருமண்ணொரு மிந்தநூலை -வைத்திருப்பார்பத்தி ரமாய்மனையினுள்ளே - ஏனோவென்றலையாதேயிந்தநூற்குள்எள்ள ளவுசாபமில்லையீசன்சொன்னார் - ஆனாலுங்கும்பசொரிபூசைசெய் தேன் - அப்பவுமேஆத்தாள்மாதளம்பூத்தாளே. (சுரு)

மனோன்மணிப்பிரசன்னம்.

பூத்தாளேதாள்பதத்தைப்பொடிக்கச்சொன்னாள் - பூரணநூ ல்தன்பாவி லாட்டச்சொன்னாள் - ஆத்தாளேயிரவிமதி கொடுக்கச் சொன்னாள் - அம்பலத்திநடனவொளி அறியச்சொன்னாள்- காத்தா ளேநாலேழுங்காட்டச்சொன்னாள் - கைகண்டபருவம்வந்து வர்க்க ச்சொன்னாள் - சேத்தாளேகுருமுடிக்குஞ்சேதிசொன்னாள் - செக சாலமாடென்றுசெப்பினாளே. (சுச)

செப்பினாளுபதேசங்காதில்ப்பா -திருச்சோதிபரஞ்சோதியா குமென்று - உப்பினால்மணியுருக்கியாடிற்றப்போ - ‘மூப்பெல்லா ங்கூட்டமிட்டாருமைத்தாய்முன்பு - அப்பினால்மண்பிசைந்து பிர் ம்மதிஷ்டி - அறிவித்தாள்அமரரெல்லா மவடம்விட்டு - தப்பினார் நான்மலையாதிருந்துகொண்டேன் - தங்கமலைவெள்ளிமலைதான்கண் டேனே. (சுரு)

கண்டவுடனமூர்தமுண்டேன் மதலையானேன் - காரணமும் பூரணமுங்கண்ணிற்கண்டேன் - பண்டிதமுவாதமுமெனக்குச்சொ ன்னாள்-பண்டிருந்தமூலிகையுங்குகையுஞ்சொன்னாள் - அண்ட.மொ

டுபிண்டவித்தை யாடச்சொன்னுள், ஆயிரத்தியிருநூறு மப்போ சொன்னேன், தெண்டிலேக்கும்யென்னுடைய நூலைப்பார்த்தால், சிறுபிள்ளைதானுடுமிந்தநூலே. (சசு)

இந்தநூல்யான்பாடச்சொன்னதாலே, யிதுநல்லவயித்தியத் திற்கேணியாகும், வந்தநூல்குகைகையைவிட்டுவெளியேறுமல், வ ழியிட்டார்புசுண்டரால்அலைந்துதப்பா, சிந்தைபெற்றபெரியோர் க்குமீசன்சொன்ன, செகஜாலமாச்சரியம்போராரசப்பா, முத்தகெ திபாகாதுதுரியங்கூடு, மாந்தரிகம்வெகுசுறுக்குமகிழ்ந்துபாரே (சஎ)

பாரேநீஅகாரமுட னுகாரங்கூட்டி - படியிரவிமதியினுடஅ க்ஷரத்தைக்கூட்டி - வாரேநீபூமுறுபால்பிராட்டிமூலம் - வைத்து ருவாய்சேவித்துவைக்கவேண்டி - சீரோதுநாதவொலிதேம்பாடுஞ்- சிவசிவாபூரணமேநோயுஞ்சாபம் - வேரோடேபிடுங்குமடா கூட் டியோது - விநாயகனேமுன்னேதுமீசம்நூலே. (சஅ)

நாலானமீசமெட்டு மூன்றுகோணம் - நடுவனாயில்விதித்திட வேநோயாளிக்கு - சேலோடேகும்பம்நீவைத்துச்சேவி - தீராதவ ல்பிணியுந்தீருந்தீரும் - வேலோனுமயிலின்மிசைமானினேடு - வெ ற்றிகொண்டுபிணிதீர்க்கமேவுமேவும் - பால்மொழியாளெந்தன்தா ய்சத்திவேலாய் - பன்னிருகைமீதிருந்தாள்வினைதீர்ப்பாளே.(சகூ)

பாளானமுப்பாழும்வியாதிதீரும் - படியானவயித்தியர்சாப த்தைச்சொன்னேன் - கோளெதும்வாராதுசாபந்தீர்த்துக்-கொண் டுநீமாத்திரைதான்கொடுத்துப்பாரு - நாளேதும்வாராதுநொடியி ல்தீரும் - நம்மாணையின்னமொருவயித்தியங்கேளே- சேளானமரு ந்துவகை சொல்லக்கேளும் - செப்புகிறேனிவ்வகையை விபரங் கேளே. (ருய)

## திரிலோகலேகியம்.

விபரமென்னுகாந்தமதுகாந்தமல்ல - வீரமதுவீரமல்ல கரு ணுபியல்ல - விபரமதுசூரிவேர்மூலியல்ல - வீணுகதண்டிமூலம்வி ந்துவுந்தி - விபரமென்னகாந்தமதுசிவந்தமின்னுள் - விநாயகனை பெற்றெடுத்தமதலைமுன்னுள் - விபரமென்னவாலிபத்தில் வீரமா ச்சு - விதியிதுதான்கருணுபிபலம்பத்தாமே. (ருக)

பத்தானமூலியல்லாமார்க்கமில்லை - பத்திரமாமறைத்தபொ ருள் வெளியிற்சொன்னேன் - சித்தானகுளவிந்த மஞ்சள்வாங்கி- சிறுவில்லைப்போல்நறுக்கிஉலர்த்தக்கேளு - முத்தான கோரக்கர்மூ லிச்சாற்றில் - மூன்றுநாளூறவிட்டுமற்றுநாள்தான் - வித்தானதாள் மூன்றுவூறப்போட்டு - வேளையிலும்மேனியிலுமிந்தவிதம் (ருஉ)

வீதமடாராசிபனிரெண்டுமாச்சு - வேதையிடுகுளவிந்த மஞ்சளாச்சு - பாதமடாகுளவிந்தம்பலம்பத்தப்பா -பனிரெண்டுநாள் மூலிசாறுசாற்றில் - வேதமடாசொன்னபடிஉலரப்போட்டு- வெயிற்படாதுலர்த்தியிடித்தூளதாக்கி - நாதமடாகடைமருந்து சொல்லக்கேளு - நல்ருணமகரம்பூகிராம்பூமாம்பூ. (௫௩)

பூவானநாகமண்செண்பகப்பூ - புனமுருக்கம்பூமதன்காமப்பூவும் - தேவானமத்தன்பூஉடம்பூவேம்பூ-சிறுநாகப்பூவுடனேகிராம்பூசம்பூ - நாவான்முல்லைப்பூபிச்சிப்பூவும் - நளினப்பூதாழம்பூவசம்புமாதளம்பூ - ஆவானமான்கொம்புகலைக்கொம்போடு - அரிப்பல்லுநரிப்பல்லுஆனைக்கொம்பே. (௫௪)

கொம்பரக்குகொம்மட்டிவிதைநாழி -கூழ்ப்பாணம்வித்துநாயுருவிவித்து - சம்பாநெற்பொரிநாழிகூவளத்தின்வித்து - சாதிக்காய்மாசிகடுதான்றிக்காயும் - கம்பரிசிபொரித்தமாகோதும்பைமாவும்-காட்டாமணக்குமுத்துவாகைவித்து -நிம்பவிளைகாற்படிஅமுக்குருவேர்- நிழலுலர்த்தியிடித்தபொடிநாழியாமே (௫௫)

ஆமேபூவிளைத்தூளும்வகைக்குநாழி - அதுவெல்லாம்வெயிலுலர்த்திதூளதாக - பூமேவுகூகைநீர்பலமேயொன்று - பூலாவிருக்ஷம்கடலிருஞ்சிவேலம்பட்டை -கூமேவுமாம்பட்டைவண்டுகொல்லி - கோடிவேலிசுக்குமஞ்சள்முத்தக்காசு - தாமேவுசதகுப்பைமிளகுஓமம் - சதாவேரிநன்னாரிகொடுப்பைவேர்த்தூளே. (௫௬)

தூளாக்கப்பட்டைமுதற் கடைச்சரக்கு - தூளாக்கிப்பொடிநாழிகச்சோலத்தூள் - பாளாக்கிதூளாகவகையிதெல்லாம்- வளைகடைவாதனுவளவுபிசகில்லாமல் -நாளாக்கிமுகிந்தநாள்கியாழம்வாங்கி - நாமுரைப்போம்பொற்சிந்திதுலாந்தானென்று - வேளாக்கியிருதுணிசலத்தில்வெந்து-விதமாகசோடசத்திலொன்றுவைத்தே.

வைத்துமேநாலுபடிகோசலம்நாழி - வாளாவின்நெய்ப்படிதாநாலுங்கூட்டி - தித்திக்குந்தேனொருபடியும்விட்டு- சித்தாமணக்கெண்ணெய்நாழிபோதும்-பத்திக்குமூதண்டக்கியாழம்நாழி -பட்டையின்கியாழமதுநாழிவிட்டு -முத்திக்குங்கள்நாழிவஸ்துநாழி-கூடவிட்டுமூவஞ்சுபடிதான்வாரே. (௫௮)

வார்த்துமேஅடுப்பேற்றித்தூளைப்பாச்சு-மைந்தனேலேகியமாய்க்கிண்டுப்போது - சேர்த்துமேபெருங்காயம்பலமொன்றப்பாதிறமானயிந்துப்புபலமொன்றப்பா-பார்த்துமேபோட்டுருட்டிதேங்காய்ப்போலே - பதனமடாபூசைசெய்வாய்கணபதிக்குந்தோத்திரமேஆத்தாட்கும்பூசைபூசை - சொற்பெரியவடுகனுக்கும்பூசைபூசை. (௫௯)

பூசைசெய்தால்திரிலோகலேகியந்தான் -புருவமயத்தொழில்
காணும்பூரணமேதோன்றும் - ஓசையிலேசொர்னமிட்டால் சுண்
டைக்காயின்-விதமடாபோதைக்குகொடுத்துப்பாரு-ஆசையடாயி
துதனக்குப்பத்தியமில்லை - அளவிறந்தபதார்த்தமெல்லா மருந்து
தின்னு - வேசியனைச்சோராதேபத்தியமிதொன்று - மேலானபிணி
வகைக்குஅனுபானங்கேளே. (௬௰)

கீழ்க்காய்நெல்லிலேகியம் அனுபானம்.

கேளடாவாதத்தில்வந்தநோய்க்கு-கீழ்க்காயின்நெல்லியின்சமூல
ம்வாங்கி-மூளடாஅரைத்துருட்டிபுன்னைக்காய்விதம்- யிகுந்தலேகி
யம்சுண்டைக்காயளவுசேர்த்து - நாளடாபத்துநாளுண்ணும்போ
து-நாலாயிரத்துச்சில்வாணவியாதிதீர - தூளடாபறந்துவிடும்லேகி
ரிகொண்டு-சோராடும்பித்தத்தால்வந்தநோய்க்கே. (௬௧)

வந்தநோய்பித்தமென்றபிணிக்கெல்லாந்தான்- வகையானமூ
சுமூசுக்கைமுன்பாகங்கொள்ள- எந்தநோயானாலும்பத்துநாட்குள்
எடுபடும்பார்வியாதியெல்லா மிறந்துபோகும் - தொந்தநோய்ச
லக்கழிச்சல்கிராணியாறும் - தூள்தூளாய்ச்செத்தருந்துதூளாய்ப்
போகும் - அந்தநோயிந்தநோயெல்லாநோயும் - அனுபானமறிந்
திடவேயகனும்பாரே. (௬௨)

சீனிலேகிய அனுபானம்.

அகலுமேசிலேத்துமங்கள்தொண்ணூற்றாறும் - அடுக்கடுக்கா
ய்வந்தநோய்க்கனுபானங்கேள் - புகலுமேசீனிய துகளஞ்சிகூட்டி
பூட்டிப்பாரிருபோது பத்துநாளும் - இகலுமேகளஞ்சியுமேயி
ருபதாச்சி -இதுதனிலேலேகியமுண்டாக்கக்கேளு-பகலுமேயாகு
மடாயிருட்டெல்லாந்தான்-பானுபோல்மருந்துதான்பருகுவாயே
தீரும்வியாதி.

பருகுவாய்சிலேட்டுமங்கள்தொண்ணூற்றாறும் - பயித்தியங்
கள்நார்ப்பதுமெண்பதுவேவாதம் - அருகுமேயிருந்தபிணி குடி
போச்சப்பா - ஆனந்தவாய்வுக்கும்அஞ்சுநாள்கொள்ள-திருகுமே
பாரிசவாய்வுக்குத்தான் - தின்றுவிடுமூன்றுநாள்தீருந்தீரும்- உருகு
மேஅந்திரவாய்வுக்குத்தான்-ஒன்பதுபோதுண்டுவிடுநாளுமூன்றே

நாள்மூன்றுகபாலவாய்வொளியும்பாரு - நாற்பதுநாள்கெ
ற்பவாயகனுமப்பா - நாள்மூன்றுகெண்டவாய் வற்றுப்போகும்-
நாலுநாளுண்டிடவேவாய்வுபோகும் நாள்மூன்றுசிலேத்துமமக
ன்றுபோகும்-நலமாகஅஞ்சுநாள்பத்துப்போது - நாள்மூன்றவு
ண்டிடவேமகோரவாய்வு மகன்றுவிடும்லேகியத்திற்படினந்தானே

படினமென்னதிமிர்வாதம்பறக்கும்வானில் - பத்துநாளுண்
டிடவேயிருபோதுந்தான் -கடினமென்னமுடக்குவாதங்கள்தீரும்

கனல்வாதம்நாற்பதுநாள்கொள்ளும்போது - படினமென்னவாதம்யென்பதுவேதீரும் - பகர்ந்தநாற்பதுபித்தம்பரிதியோடுங்-கடினமென்னமுகவாதம்தீருமப்பா - களற்சிக்காயளவுநாள் மூன்றுதானே. (௬௬)

தானென்றதாதுவிர்த்திமிகவுண்டாகும் தப்பாதுகாதினொச்சல்காதுமந்தம் - பானென்றபத்துநாட்கொள்ளும்போது பறக்குமடாஅண்டவாதங்களப்பா - மானென்றவிளம்பிள்ளை வாதத்துக்குமைந்தனேபத்துநாட்கொள்ளும்போது - மீனென்றவிறச்சியது ஆகாதப்பா மிஞ்சினல்வெள்ளாடுவேண்டிக்கொள்ளே. (௬௭)

கொள்ளென்றகுடல்வாதங்குமட்டுவாதங் குருக்குவலியிடுப்புவலிகுதிக்கால்வாதம் - விள்ளென்றதந்தகட்டுவாதமெல்லாம் வெருண்டோடும்பத்துநாட்கொள்ளும்போது - கள்ளுண்டவெறிபோலேகிரிமீறும் கடும்பிலங்களுண்டாகும்காலிலப்பா - எள்ளென்றஅளவாலுந்தின்பீரானல்என்னசொல்வேன்வருஷமொன்றில்யானையாவாய். (௬௮)

யானைபோல்பிலன்கொடுக்கும்மெய்விடாது அளவறந்தவாய்வெல்லாமகன்றுபோகும் - மானனையாரனுபோகங்கொள்ளைகொள்ளை வலுவென்னநாற்பதுநாள்தின்பீரானல் - கூனவலிகூனிமிருஞ்சுணையில்லாத குறிவாதமகலுமடாமண்டலத்தில் - ஏனமுடன்வந்தவாய்வெல்லாந்திரும் இதமானவாய்வுக்குஅனுமன்பூசை(௬௯)

அனுமன்பூசை.

பூசைபண்ணியனுமன்பேர்சொல்லிநீயும் புகழானலேகியத்தைக்கொடுத்துப்பாரு - வாசியாய்ப்போகுமடாஅனுமந்தன்தான் வாதநோயகற்றிவைப்பான்வலுவுமீவான் - தோசியாள்நீங்களுந்தான்கர்ம்மந்தீர்ந்து சுனையாடிநீறணிந்துசுயம்புமேனி - நேசியடாசூலேவரும்வியாதிக்கெல்லாம் நிகழ்த்துகிறேன்செய்பாகம்நிலையைத்தானே. (௭௰)

வயிரவர்பூசை,

நிலையானசூலேபதிநெட்டுமுண்டு நேரானசூலேவகையனேகத்திற்கும் - துலையானசூலேநோய் கொடுமைசெய்து சொல்லாதப்பெரியோராத்தூஷணித்து - குலையெரியயடர்ந்துவந்தபாவத்தாலேகொடுசூலேவியாதிவந்து குறுகும்பாரு - அலையாதேசூலேநோய் வயிரவர்க்கு அனுஷ்டித்துமாத்திரைலேகியமுந்திண்ணே. (௭௧)

திண்ணடாகன்னேசைகன்னச்சூலே தீரானஆணுக்குவலதுபக்கம் - பெண்ணடாயிடதுபக்கம்கண்டுபாரு பேரானபண்டிதரோசரீரம்பார்த்து - கொண்ணடாபோடாதேலேகியத்தைக் கொடுத்து

ப்பார்பத்தியமாயேழுநாளும் - சன்னடாதண்ணியிலே முழுகச்
சொல்லு தாக்கிப்பாரிருபோதுசுண்டைக்காயே. (௭௨)

காயத்திற்கண்ணேசிகன்னச்சூலை கண்டமாலைப்பிளவை காணு
தோடும் - மாயத்தில்நேத்திரத்தின் கண்டசூலை வடிசூலைவெடிசூலை
வாதச்சூலை - தீயத்தில்தீய்ச்சூலைசென்னிச்சூலைதேகத்திலுஷ்டணத்
தால்மேகச்சூலை - நேயத்தில்வருசூலையிவைகளெல்லாம் நிர்மலமா
ம்லேகியத்தைக்கொடுத்துப்பாரே. (௭௩)

கொடுத்துப்பார்வுட்காச்சல்மாந்தசூலை கொடிசூலைகுடற்சூ
லைகரப்பான்சூலை - அடுத்துப்பார்மண்டலமே கொண்டாயானால்
அறையும்வில்வாதியெண்ணெய்முழுகச்சொல்லு - கொடுத்துப்பா
ர்சூலையெல்லாமெங்கேபோச்சு குறிசூலைலிங்கத்தில்வந்தசூலை- விடு
த்துப்பார்போகுமடா குஷ்டமெல்லாம் மேகமெல்லாம்போச்சு
தடாநீறுமாமே. (௭௪)

நீர்ச்சூலைமாறுமடாயேழுநாளில் நிறுவாணிபூசைசெய்வாய்சூ
லைக்கெல்லாம் - கூற்சூலைபவுத்திரங்கள்மூலச்சூலை குடிப்போகும்
மண்டலமேகுறுகிப்பாரு - காற்சூலைகைச்சூலைதந்தச்சூலை கடிச்சூ
லைதீருமடாயத்துநாளில் - மோற்சூலையோனியிலேவந்தசூலை முற்
சூலைபிறச்சூலைமுழுதும்போமே. (௭௫)

முழுதும்போம்சூலையென்ற பிணியெல்லாந்தான் மூழ்கிவர
வில்வாதிதன்றுவாதம் - பழுதுவரலேகியமுமிருபோதுண்ணு பக்
குவமாயாவின்னெய் தேனமுதுகொண்டு - அழுதமேதிரியாதே
ருமலைப்போகும் அறுகம்வேற்கியாழமுண்ணுமனலேராது - தொ
ழுதுகணபதிபூசைவயிரவற்குத் தோத்திரமேசெய்மருந்து சித்தி
தானே. (௭௬)

சித்திக்குமுட்சூலைமுட்டுச்சூலை சொரிபித்தஞ்சொரிசிரங்குகர
ப்பனெல்லாம்-மூத்திக்கும்வில்வாதிமுழுகும்போதமூட்டோடே
வொழிந்துதடாசூலைரோகம் - பத்திக்குமனமிருந்தால்மருந்துசித்
தி பண்டிதற்குப்பணங்கொடுத்தால்வியாதிதீரும்- சத்திக்கும்பூசை
தனைத்தாக்கிப்பாரு தானுனகத்தினடுவோடும்பாரே. (௭௭)

ஓடுமேசூலைபதினெட்டுமோடும் உடலிலுள்ளவியாதியெல்
லாமொழிந்துபோகும் - கூடுமேகுருபதவிசேஷங்கூட்டுங் குரு
பாதங்கூட்டிவைக்குங்கொடுப்பாளாத்தாள்-நாடுமேபூரணசூஸ்திரத்
திற்சொன்ன நலமானகாந்தமதுகின்னங்கின்னம் - தேடுமேவி
யாதியுண்டோகின்னத்துக்குத் தினந்தோறும்லேகியங்கொண்டே
றுவாயே. (௭௮)

காந்தக்கற்பம்.

தேறுவாய்அயக்காந்தச்சத்துதங்கம் சிறிதளவுகெந்தகச்செ ம்பிவாயானல் - மாறுவாய்உன்தேகங்கற்றாணச்சு வதுத்துதடா குளவிந்தமஞ்சளாலே - பூறுவக்கியானவியாதிவழியினலே பூரண மும்பூவிருந்தமருந்தினலே - தேறுவாய்வயித்தியமுஞ்செய்துபா ரு. செகஜாலமித்தைவிட்டால்வேறேயுண்டோ. (எகூ)

உண்டானமாத்திரைகள்பரிசுன்னங்கள் உரைப்பானபற்பங்க ள்செந்தூரங்கள் - பண்டானகியாழங்கள்லேகியங்கள்பரிவானசூர ணங்கள்கிருதத்தோடு- கொண்டாம்வழலையல்லோஎல்லாநோயும் குடிலைவிட்டுத்தள்ளும்பார்சத்தியந்தான் - விண்டாலேதலைவெடிக் கும்வயித்தியோரே வேதாந்தஞ்சொல்லவுமேயான்சொன்னேனே

சொன்னதினலிதுமறைத்தார்சித்தரெல்லாஞ்சூக்ஷமாய் நாள் வெளியிற்சொல்லிப்போட்டேன் - இன்னதெனஅறியார்கள் உலக த்தோர்கள் இந்தநூலாயிரத்தியிருநூறுந்தான்- முன்னதிலேபின்ன திலேயென்றுநீயும் மூகமாத்துபண்ணியல்லோநூல்வேருச்சு-பொ ன்னதுபோலிந் நூலைவைத்தோர்பாதம் போற்றியேவாங்கிவந்து பதனம்பண்ணே. (அக)

மந்திரக்கியானம்.

பண்ணவேஅசாத்தியங்கள் சிணமேபித்தம் படிகடந்தால்அ ரைச்சிணத்தில்சொஸ்தமாச்சு-உண்ணவேபித்தமதுநாற்பதுண்டுஉ லகமதிலொன்றுதொட்டுநாற்பதுவரைக்கும் - திண்ணவேபித்தம றவகையைக்கேளு சிவசூக்ஷசந்தியாநித்தாதிவாரம் - எண்ணவேந திமூழ்கிமந்திரதியானம் மிந்திரநமதயாகருணிலக்ஷமோதே.(அஉ)

சூரியபூசை.

ஓதியேநாற்பதுநாள்சூரியபூசை உற்பனமாய்சிவந்தபுஷ்ப மனதில்தேற்றி- ஆதிநாள்விரதமிருபித்தமெல்லாம் அற்றுதடாலே கியமேதின்னுதின்னு - சோதியொடுசிலம்பொலியிநடனங்காணு ம்தோற்றுமடாபூரணமேசூக்ஷம்சூக்ஷம் - பாதிபுரமேவுணிகத்தீசன் சொன்னுன் பண்டிதமேபார்ப்பதற்குசுகுர்தமாமே. (அங)

எலுமிச்சம்பழக்கற்கம்.

ஆருமேபித்தநோய்க்கனுபானங்கேள் அரையினெலுமிச்சம்ப ழச்சாறறைந்திட்டேனே-போகுமேசம்பழச்சார்நாழியானல் பூர ணமாஞ்சீனிபலம்பனிரண்டப்பா - வேகுமேகோழிமுட்டை உ டைத்துவிட்டு வெந்தபின்புமெழுகுபோற்குளம்புமாமே - சாகு மேஅண்டத்துதேவரெல்லாஞ் சாப்பிடவேசமபாகம்பாருகேளே.

பாருமேசம்பழம்அண்டஞ்சீனி பருகவேலேகியமுங்கொள் ளும்போது - வாருகேள்கூத்தாடும்பித்தமெல்லாம் மண்டலத்தி லொழிந்துதடாபித்தத்தாலே-தாறுமாறாய்மிரண்டுமேநோய்களெ ல்லாம்தள்ளுமடாபித்தவாய்வுபித்தகோஷ்டம்-நீருமேவாதபித்தந் தலைவெழும்பியோடல்நெட்டோட்டமானபித்தம்நிற்கும்பாரே.()

நிற்கும்பார்திரிகிபித்தம் ரோகமீறி நிறமூலபித்தசோகையு மேதீரும் - புக்குமேபித்தத்தின்எருவுகாந்தல் புத்திகெட்ட அறிவு கொட்டாவியோடு- கக்குமேபித்தமுறுவாந்திரோகம் கண்காந்தல் கண்புகைச்சல்கண்மாறாட்டம் - தொக்கிலேலேகியமுங்குழம்புங் கொண்டால் தூள்தூளாய்ப்போயிவிடும்பித்தந்தானே. (௮௬)

தானான கரும்பித்தம்வாதபித்தஞ் சந்தியிலேவந்தபித்தங்குன் மபித்தம் - மீனான பித்தநீரிழிவுமேகம் வினைசபாண்டுபித்தமெலாமீ ளும்மீளும் - கோனானவீசனல்லோயெனக்குச்சொன்னார் கூத்த றிந்துஉங்களுக்குக்கூறினேனான் - வானவர்களறியார்களிந்தவித்தை மைந்தனேபுலத்தியனேவயித்தியங்கேளே. (௮௭)

கேட்பதுநான்புவியிலுள்ளவயித்தியர்க்குக் கிட்டுமோதாயி டத்திற்கேட்டுச்சொன்னேன் - நாட்கடினஞ்செல்லாதுநோய்க்கீந் தாலும் நாற்பதுநாளாகுமுன்னேபித்தம்போகும் - தேட்கொடுக் குமுள்ளடவாசிவத்தியானஞ் செபஞ்சேர்ந்தமருந்திண்ட வயித்தி யசேதி - சூட்டதிற்பித்தமென்றபிணிப்பொய்யப்பா சூக்ஷமதில் பண்டிதரேதேர்ந்திடீரே. (௮௮)

தேர்ந்திடீர்மனமுனைத்த சித்தற்கெய்தும் செகஜாலவயித் தியனேசெய்யப்போறான் - பூந்திடீர்பித்தமென்றபிணிகள்தீரப் புண்ணியரேஸ்ரீராமர்தனுற்கொடிக்குள் -ஏந்திழையோடினிதிருந் துவாழ்வீர்பாவ மெடுபட்டுஓடுங்காண்பித்தமெல்லாம் - நான்தா னேநாதாந்த வயித்தியபாகம் நாட்டினேனாட்டிலுள்ளோர் பிழை க்கத்தானே. (௮௯)

## விமலாதி லேகியம்.

தானென்றபித்தமறும்மனுபானத்தால்சம்பரமேவெளியொ ன்றுசீனிசொல்லு - வேனென்றமுட்டையதுவிள்ளாதேநீ வெளிய ரங்கமாகவெங்கும் புலம்பிடாதே- மானென்றமனோன்மணித்தாய் சொன்னசூக்ஷம் மைந்தனேயிதிலின்னமாற்கங்கேளு - ஊனென்ற சிலேத்துமத்தின்வூடேசேர்ந்த ஊருபிணிக்கனுபானம்முட்டக்கே ளே. (௯௰)

ஊடென்னசிவநாதன்சேர்ந்ததாலே உடருணமுமகத்தானவு யிர்களெல்லாம்- வீடென்னகடல்பொங்கிமறைந்துபோச்சு வேதா

ந்ததியவொளிப்படங்கிப்போச்சு-பாடென்கைமேலேபட்டதாச்சு பாடைகட்டும்படியாச்சுஅட்டதாச்சு- வீடென்னசிலேத்துமத்தின் வாரிவைத்த விமலனுடலேகியத்தைக்கொள்ளுகொள்ளே. (௩௧)

இராமபாணசெந்தூரம்.

கொள்ளவேகடல்வற்றராமர்தானும் கூர்வாளிஅக்கினிஅஸ்திர த்தைத்தொட்ட - வள்ளல்மென்மருந்துபாஷாணம்நாபி வளருகி ன்றகருநாபிபச்சைநாபி - விள்ளவேகடுங்காரஞ்சுத்திசெய்து விரு துக்குநில்லைப்பால்விட்டுஆட்டி- அள்ளவேபில்லைதட்டிப் புடத்திற் போடு அதன்பிறகு அதையெடுத்துசெந்தூரியே. (௩௨)

செந்தூரமாகுதற்குபுரசம்பூச்சாற் சேர்த்தரைத்துமாதளம் பூசெந்தூரத்தை -இந்தூரந்தாரமென்றிசைத்திடாதே இரதிகருநா தாந்தம்விட்டு ஆட்டி - கந்தருகுஞ்சட்டியிலேதாளகத்தைக் கதிரவ ன்போல்செந்தூரங்கண்டபின்பு- விந்தூரும்பனிமுகத்தில்வைத்தி ட்டாக்கால் மிகவாகுமுப்பூவுமிசையும்பாரே. (௩௩)

மேகராஜாங்கலேகியத்தில் அனுபானம்.

இசையுமேமேகராஜாங்கனுலே எடுபட்டமேகமிருவதினே டோக - அசையுமேநீரிழிவென்றேத்ததெல்லாம் ஆறுமடாபணவி டைசெந்தூரஞ்சேர்த்து - பிசையுமேலேகியம்புன்னைக்காய்வீதம் பொதிந்தருந்துமண்டலத்தில்வியாதிப்போச்சு-விசையுமேசெய்யு மடாயிந்தபாகம் வேதாந்தங்கண்டுணர்ந்தொன்றறிவர்தானே (௩௪

அறிவதுவேசயமானல்நாலுந்தீரும்அதிகமடாதீராதிரெண்டு தானும் - பிறிவதுவேசெந்தூரம்பணந்தான்தூக்கி பேசாமலேகி யம்புன்னைக்காய்வீதம் - நெறியுடனேமண்டலமே கொண்டுபாரு நிர்த்தூளாய்சயமாறும்நிமிஷம்பாரு - குறியுடனேசிலேத்பனந்தா ன்தொண்ணூற்றாறும் குடிபோறேமென்றுசொல்லி கும்பிடும்பா ரே. (௩௫)

கும்பிடவேசிலேற்பனமாம்யீளைமாந்தைகுடல்வாச்சிஉளமா ந்தைதாகரோகம்-நம்படவேயாளிக்கும்பதகரிவிக்கல் நமநிளைப்பு யீளைநோய்கபமுங்கக்கல் - வம்புடனேயிதுதீரும் பணவிடைசெந் தூரம் மாசக்காயளவுருட்டிலேகியத்திற்கொள்ள - சம்பிடவேயக ன்றுபோம்சயமாறுந்தான் தாளிசைபத்திரிசூரண பொடியிற்கொ ள்ளே. (௩௬)

தாளிசப்பத்திரி சூரணத்தில் அனுபானம்.

பொடியிலேசெந்தூரம்பிரட்டிக்கொண்டு புன்னைக்காயளவு ருட்டிலேகியத்தை -நுடிபுடனேகொண்டிடவேகபமறுக்கும் தோ

துரிவுளதும்புருக்கித்துளாமப்பா - வடிவுடையமன்மதன்போல ழகுண்டாகும் மாப்பிளையாயாவாய்நீபெண்ணுக்கப்பா - குடிகேடுசெய்யாதேலோகத்துள்ளே கொள்ளாதநோய்க்கொள்ளும் கூர்ந்துபாரே. (௧௭)

கர்மதர்மம்.

கூர்ந்துபார்சிலேத்துமத்தால் வந்தரோகம் கோடானகொடிக்குசெந்தூரத்தோடே, ஆர்ந்துபார்மண்டலமே கொடுத்துப்பாரு அப்பனேசிலேத்துமந்தானகலும்பாரு, நேர்ந்துபார்புண்ணியமேசெய்வாயப்பா நெட்டூரஞ்செய்யாதேநோய்தீராது, சேர்ந்துதான்போகுமடா கர்மஞ்செய்தால் சொற்பெரியதர்ம்மமேசெய்துவாயே. (௧௮)

செய்வதுவேதர்மமடாஆத்தாள்பூசை திருவானநிறுவாணிவடுகன்பூசை, ஐவருமேகுருபூசைமாதர்பூசை அனுபோகியேசெய்வானவனிமீதில், மெய்வருமேவகரா வயித்தியமேவேண்டும் விதிவேண்டும்விட்டகுறைவேண்டும்வேண்டும், பொய்விதியாதொருநாளும்நிலைநில்லாது பூரணமேதலைக்கட்டும்புண்ணியோரே. (௧௯)

புண்ணியமேதகிடைக்கும்பாரிலப்பா பொய்சொல்லிச்சத்தியமேமறந்தபேர்க்கு, கண்ணிலேகண்டாலுந்தக்காதப்பா காரணமும்பூரணமுங் காணமாட்டார், மண்ணிலேயிருந்துகொண்டு யோகம்பார்த்து வாதியாய்வந்தவனேயவன்மெய்ஞ்ஞானி, விண்ணிலேபறந்தாலுமிந்திரஜாலம் வேண்டுமடாசகலசித்துக் காணியாமே. (௨௰)

ஜண்டமாருதம்.

ஆணியாமின்னமொருவயித்தியபாகம் அறைகிறேன்சண்டமாருதமேயாகும், தோணியாம்வியாதிவாருதியைத்தோண்ட சொல்லுகிறேன்பண்டிதமேசுகுர்தமப்பா, வேணியரனருணாத்தமருந்துபாகம் மீகாமியோட்டிவித்தகப்பல்போலே, பேணியேயாமுரைப்போம்பிள்ளாய்கேளு புலத்தியனேபிலத்தகருமானந்தானே ()

தானான தனிமருந்து முக்கோணத்தில் தான்முளைத்தநாள்மூலந்தப்பாதப்பா, மானானதொன்றெடுத்துப்பதனம்பண்ணி வலியகருநாபியிலேமேனிமூலம், தேனானதனிசரக்குகடையில்வேண்டி சிவன்பேரிலாணையிட்டுலர்த்திக்கொண்டு, கானானகடைதலைக்கியெண்ணெய்பண்ணி கற்பூரவைப்பிதனைக்கருதுவேனே. (௨௨)

கருதுவேன்முன்புடத்திற்சுண்ணமாகும் கண்டுகொள்ளகொடியசுன்னங்குருவுமாச்சு, விருவானசரக்கெல்லாங் குருவுமாகும்

விஞ்சையிதுகடுகளவுயிட்டுப்பாரு, பொருதுமேகடைசரக்கு நவலோகங்கள் பொன்போலேநவபாஷாணநீறும், ஒருவரிடஞ்சொல்லாதேயுன்மானத்தை உரைத்தாக்காலிதையுரைநீயுண்மைபாரோ()

## கருநாபிச்சுன்னம்.

உண்மையாங்கருநாபிச்சுன்னம்பண்ணிஉட்கருவாய்ப்பத்திரமாய்வைத்துக்கொண்டு, தன்மையாய்நவலோகம்நீற்றுநீற்று சண்ணுமடா அநுபான மறிந்துபாரு, வன்மையயாநுரைத்த இருநூற்றஞ்சில் வயித்தியத்துக்கிந்தமருந்திட்டுநீற்று, நன்மையாய்வியாதியப்படியேதீர்க்கும் நாதாந்தவயித்தியனேசெய்துபாரோ. (௱௪)

வாரானகணேசநடிமூலங்காப்பு வரையிருந்தவல்லபையின் பதியேகாப்பு, நேரானசிவன்காப்பு நந்திகாப்பு நீதியுள்ளரிஷிகாப்புதேவர்காப்பு, பூராயமானகருமுருகன்காப்பு புகலுகின்றபெரியோர்கள்பாதங்காப்பு, சீரானகருநாபிச்சுன்னஞ்சேரச் சேர்மாணமினிக்கேளுசெப்புறேனே. (௱௫)

## இரசச்சுன்னம்.

செப்புகிறேன்சூதமது களஞ்சிபத்து சிவமூலிசாறதனில்சுத்திசெய்து, தப்புமேவாராமல் செங்கற்றாளுஞ் சாறணையின்சாறுத்தியரைத்துருட்டி, உப்புமேசட்டியிட்டு அதனுக்குள்ளே ஒருகுகையில்ரசவில்லையூடேவைத்து, வைப்புரீசீலைமண் செய்யுமுன்னே வழலைநீர்கடுகளவுகொடுத்துவையே. (௱௬)

வைத்துமேமேற்சட்டி கவிழ்த்துமூடி மைந்தனேசட்டிவாய்சீலைமண்செய்து, வித்துமேயடுப்பேற்றிவிறகுகொண்டு வெறுளாமலொருசாம மெரித்துவாங்கி, பத்துமேற்சுன்னமது கூகைநீரும் பறக்குமடாசூலைபதினெட்டுரோகம், மைத்துமுள்ளபிணிகளுக்குத் தாக்கிப்பாரு வயித்தியரேநோயெங்கேபோகுந்தானே()

போகுமேநாள்மூன்றுபனவெல்லத்தில் பூட்டிப்பார்பணவிடைரசபஸ்பத்தை, யேகுமேகரப்பனெங்கேயரையாப்பெங்கேயீரல்முட்டியெலும்புருக்கிச்சோகையெங்கே, சாகுமேநோய்களெல்லாமூன்றுநாளில் சண்ணுமேபுண்புரைகளெல்லாந்தானும், ஆகுமேபத்தியமாயிருக்கச்சொல்லு அப்பவல்லோரசபற்பங் கேட்கும்பாரோ. (௱௮)

கேட்கவேரசபற்பமாவின்வெண்ணெய் கிரிடித்துமூன்றுநாளுண்ணும்போது, கேட்கவேமேகமிருபதுமேபோச்சு கிறுகிறுப்புவயிற்றுவலி யெல்லாம்போச்சு, மீட்கவேபுளியுப்பு தள்ளிப்போடு மீறியேபெண்ணாசையொழித்துப்போடு, கேட்கவே ஆருக்குப்பவுத்திரம்வந்தால் கெட்டியாயிப்படியேகொடுத்துப்பாரோ()

கொடுத்துப்பார்சுரப்பனுக்குவாய்வுமீடை குன்மமென்றவ
யிற்றுவலிகோடாகோடி, எடுத்துப்போம்வியாதிகளுக் கெல்லாம
ப்பா என்னசொல்வேன்ரசமீடோயில்லையில்லை, அடுத்துப்பார்வ
யித்தியர்சேர்மானத்தை ஆருக்குஞ்சொல்லாதேயுலகமீதில், தொ
டுத்துப்பாரதிகமடாவழலைச்சுன்னஞ் சொன்னபடிஆடுமடாசுருக்
குத்தானே. (௱௰)

கெந்தகச்சுன்னம்.

சுருக்காகநெல்லிக்காய்கெந்திவாங்கிசுகமானதேசியின்கனிசா
ற்றுலே, கருக்காலேஅரைத்துருட்டிபில்லைதட்டிசதிரவனில்காயவை
த்துவட்டவோட்டில், குருக்காகபில்லைவைத்து மேலோடுமூடி கு
றையாமற்சீலைமண்ணுஞ் செய்துகொண்டு, சருக்காதேஅன்பதெ
ருபுடத்தைப்போட சந்திரன்போல்சுன்னமடா கெந்திதானே ()

கெந்தியிலேபணவிடைதானெடுத்துக்கொண்டு கிரிகையுள்ள
திரிகடுகுபொடியுந்தேனும், அந்திசந்தியிருபோதுங்கொடுத்துப்
பாரு ஆயிழைக்கிகெற்பநோயகலும்பாரு, உந்தியிலேசுழிவாய்வு
அற்றுப்போகும் உத்தமனுங்குமாரனையும்பெறுவாளாத்தாள், நிந்
தனை தான்செய்யாதேவேதாந்தத்தை நிர்த்தூளாய்ப்பண்ணுமடா
வுன்றுபாரோ. (௱௰௨)

உன்றுபார்ஜலக்கழிச்சல் கிராணிமூலம் ஊஷ்ணவாய்வறுகு
லையொழியக்கேளு, புன்னைக்காயளவுருட்டிலேகியத்தில் பூட்டிவிடு
பணவிடைகெந்திநீறு, பொன்னைப்போல்கிராணியதுசேரப்போ
ச்சுபுலத்தியனேபத்திரமாயுண்ணச்சொல்லு, என்னைப்போலாருந்
தானுனக்குச்சொல்லார்இன்னமொன்றுசேர்மானங்கேளுகேளே.

சின்னிக்கியாழம்அனுபானம்.

சேர்மானங்கெந்திபணவிடைதாநீறு சிருசின்னிகியாழத்திலுண்
ணச்சொல்லு, நேர்மானங்குஷ்டமெங்கேபெருநோயெங்கே நிலை
கெட்டமுளைமூலமெங்கேபோச்சு, ஆர்மானம்போனலென்றிருந்
திடாதே அதினலேபாவம்வரும்அவனிமீது, ஊர்மானம்வுனக்கல்
லோமறவிடாதே உன்மானமென்மானந்தற்காராயே. (௱௰௪)

காரடாபத்தியமாயுண்டுவானி கருணையுடன்நோய்தீரும் காய
ச்சித்தி, பாரடாகெந்திதனைக்கொள்ளும்போது பார்தனிலேநீயு
மொருசித்தனுவாய், ஆரடாவுனக்கீடுவுலகிலுண்டோ அம்பலத்தில்
நடனவொளி காணும்பாரு, பேரடாநாதபற்பங்கெந்தியாலே பி
லத்துதடாவுன்தேகம்கற்றூணுச்சே. (௱௰௫)

தூணுச்சுகெந்திநீர்நாள்பத்துண்ணு தொண்ணூற்றூர்தத்துவ
மூந்தோன்றும்தோன்றும், ஆணுச்சுபெண்ணுச்சுயாராளுலும் அ

ணுவளவுகொண்டுவரச்சாவேபோச்சு, வீணுச்சுயென்றுசொன்னு ல்கற்பமேது வீணர்களேதெரியாதஞானக்கூறு, தோணுதுவிந்த முறைவைத்துப்பாரு சூக்ஷமடாநான்சொன்னேன்கெந்தம்நீறே()

பொரியனுபானம்.

நீற்றிலேபணவிடைதா னெடுத்துக்கொண்டு நீரிழிவுக்கனுபா னம்பொரிமாவப்பா, போற்றியேகொண்டுவர ஒழிந்துபோகும் பூமியிலேபத்தியமாய்க்கொண்டுவாநீ, நேத்திரம்போல்தீருமடா சகலநோயுந்நீதிபெறச்சொல்லிவிட்டேன்கண்டுபாரு,பாத்திருநீய னுபானங்கண்டுகொள்ளபறக்குமடாவியாதியெல்லாம்பாருபாரோ.

எல்லாந்தாநின்னமொருசதையடைப்புக் கியல்பானதுன்மா ங்கிஷ்அடைப்புக்கெல்லாம், வல்லாரைச்சாற்றினிலேபொரிகாரஞ் சேர்த்து மைந்தனேவெள்ளிநீற்கூடச்சேர்த்து, சொல்லாமலுண் ணயிலேதீரும்பாரு, சுகபோகமாகாதுவிதுக்குத்தானும், இல்லா தமருந்துவகையின்னஞ்சொல்ல, விடமிருக்கச்செப்புகிறேன்வயி த்தியோரே. (௱௰அ)

பனவெல்லம்அனுபானம்.

வயித்தியரோசொரிசிரங்குகிரப்பன்புண்ணும் மகத்தானதீப் புண்ணுங்குலைப்புண்ணும், பயித்தியங்கொண்டலைவார்போல்சொ ரியவேண்டாம் பணவிடைதான்கெந்திநீற்பனைவெல்லத்தில் சயித் தியமாய்ச்சாப்பிடவேமூன்றுநாளுந், தண்ணீரில்மூழ்கிடவேதீரு ம்புண்கள் வயித்தியமேபிலத்துதடாதருமவித்தை, மண்டலத்தில திகமடாபாருபாரோ, (௱௰௯)

பாரப்பாகெந்திபற்பங்கொண்டபேர்கள் பருதியொளிவிடுந் தேகம்மாயாக்கண்டம், ஆரப்பாவிட்டகுறைக்காரனுவான் ஆத்தா ளுக்காளவானவனியோரோ, சாரப்பாயென்றாலும் சாரமாட்டான் தவயோகம்வேண்டுமென்பான்றவமேசெய்வான், காரப்பாகுருப தத்தைநித்தங்காற்பான்கருணையுள்ளகாந்தபற்பங் கருத்துட்கேளே.

காந்தபற்பம்.

காந்தமதிலாதளம்பால்வார்த்தரைத்துக் கதிரவன்போல்வில்லைத ட்டிக்காயவைத்து, சேர்ந்தபடிமுன்போலேயோட்டில்வைத்துசெ யபற்பங்குருகொடுத்துப்புடத்திற்போடு,பேர்ந்தபடியன்பதெரு வடுக்கிப்பாருபுடமாறியெடுத்துக்கொள்காந்தவில்லை, நேர்ந்தபடி வியாதிகளைக்கொல்லும்பாருநிர்ம்மலபற்பத்தைநிகழ்த்துவோமே.

நிகழ்த்துவோம்பாண்டெங்கேசூலையெங்கே நீதியற்றகுஷ்ட மெங்கே பெருநோயெங்கே, சகத்துவோம்சோகையெங்கேதலை கணங்களெங்கே சயமானதெங்கையடாதாகமெங்கே, பகத்துவோ

ங்கொண்டல்வாய்வெங்கேபோச்சு படுவனெங்கேபிளவையெங்கே
யோடிப்போச்சு, மகத்தானநோய்களெல்லாங்காந்தங்கண்டால் வ
ழிகூட்டிநடக்குமடாஅனுபானத்தே (௱௨௪)

பானத்தேவந்தநோய்மலக்கட்டெல்லாம் பறக்குமடாவலிக
ளெல்லா மெங்கேபோச்சு, மானத்தேபுத்தெங்கேவரட்சியெங்கே
வலுவானகுட்டெங்கேவலுநோயெங்கே, தானத்தேபுழுவெங்கேகி
ருமியெங்கே சஞ்சலங்களெங்கையடாபிணிகளெங்கே, ஞானத்
தேமனமிருந்தால் நோய்களெல்லாம் நாடாதுகாதவழிக்கப்பால்
போமே. (௱௨௫)

போமேதான்கடியெங்கேபுகைச்சலெங்கே பூடெங்கேநலிகைநீ
ராம்பலெங்கே, நாமேதானென்றுவந்தரோகமெங்கே நலுக்கலெ
ங்கேபற்பமெங்கேசீதமெங்கே, டிாமேராய்மலைபோலேஓடிவந்த
வாதமெங்கேபித்தமெங்கேஅய்யமெங்கே, மேலானகாலோய்ந்த
தளர்ச்சியெங்கே சண்டாளயிமனெங்கேபொய்யாய்ப்போச்சே.()

பொய்யானபிணியேது காந்தபற்பம் பூட்டிடவேபறக்கும
டாபிணிகளெல்லாம், மெய்யாகநின்றிடும்சோதிக்காந்தம் மெய்
யாகுமருந்தல்லோவியாதிக்கெல்லாம், அய்யய்யோகாந்தத்திருடி
ன்வேகம் ஆரறிவார்வியாதிகண்டபேற்குத்தோற்றும், கையோடே
கொண்டுவிடுகாந்தபற்பம் கைகண்டஅனுபானங்கருதுவேனே.()

கருதுவேங்காந்தபற்பம்பணவிடைதான்கற்பித்தநோய்களெல்
லாம்பசுவின்பாலாம், விருதடாநோய்கள்கண்டுநாதாக்கள்தானும்
விதவிதமாய்கொடுத்துவரமீள்வாரப்பா, பரிதிகண்டபனியடாவாயு
வியாதிசேர பறக்குமடாமண்டலத்திற்பாருநீயும், சுரிதியிதுமுடிந்
தவிடமல்லோகாந்தம்சூட்டிப்பார்வியாதியெல்லாந்தூளாம்பாரோ

தூளாகும்வயிற்றுவலி குன்மமெட்டும் சொற்பெரியகண்ட
மாலைசென்னிச்சூலை, யாளாகுங்குருபிடைகபாலவாய்வுபரங்கியெ
ன்றவெடிசூலைப்பவுத்திரங்கள், நாளாறுநாளேழுநாலுபோது நல
மானமூன்றுநாள்மூன்றுபோது, வீளாதுபத்தியமாய்த் திண்ணச்
சொல்லு வியாதியெல்லாமொழியுமடாமிருதுவாமே. (௱௨௭)

தாமென்றமருந்துகொண்டால் பிணிகள்தீருந் தர்மமதுசெ
ய்துவந்தால்கர்மந்தீரும், நாமென்னபிறக்கையிலேசித்துண்டாச்
சோ நாடியல்லோபிறகுகண்டோம்நாதாந்தத்தில், போமென்ன
ஆராலுமறைத்ததுண்டோ புலத்தியனேவிட்டகுறைகூடுங்காலம்,
சாவென்னசொன்னாலுஞ்சாவானோசொல் தாய்பதத்தில்முத்திபெ
றதருணம்பாரோ. (௱௨௮)

தருணமென்னமதியிரவிகூடினாலே தரணியெல்லாஞ்சித்தாகிப்போகுமென்று, வருணசெயஞ்செவித்தாப்போல்வேதவியாசர் மார்க்கமாய்சாத்திரத்தைக்கட்டிப்போட்டார், திருணமாய்நினைத்தார்கள்ஞானக்கூறு செகமெல்லாம்பொய்யென்று திருஷ்டித்தார்கள்,அருணனைப்போல்காந்தியொளியறியமாட்டார் ஆயிரந்தான் சொன்னாலுமலைவார்தானே. (௱௨௯)

அலையாமலிந்நூலைக்கண்டுதேறி ஆதிதொடுத்தந்தவரையறிந்துகொண்டு, துலையாதவித்தையெல்லாமறியாடி தொல்புவியிலிந்திரமாஞ்சாலவித்தை, விலையாலேவிலைப்படுத்திப் பிழைப்பாரப்பா விள்ளார்கள்ஞானவெளி வேதத்தோர்கள், மூலமாதாராசைகொள்ளார்முறையாய்ச்செய்வார் முத்திபெற்றோரவரல்லோமுனிவர்தாமே. (௱௩௰)

முனிமேவுஞ்சீவர்களைக்கொண்டுவந்து முத்திருக்குஞ்செவிச்சாற்றிலூறப்போட்டு, தனிமேவும்நாற்பதுநாட் சென்றபின்பு சாதகமாய்வுலர்த்திடித்துதூளாய்ப்பண்ணி, இனிமேவும்வயித்தியத்தைச்சொல்லக்கேளு இந்திரமாங்கோபமதுநூறுலர்த்திப், பனிமேவுங்குழியானைநூறுலர்த்திப் படினமினிசொல்லுகிறேன் பலம்பத்தாளே. (௱௩௧)

தூளானசீவகளைதூளைக்கொண்டு துடியானயானைக்கண்சட்டிக்குள்ளே,பாலானஆவினெய்யுழக்குவிட்டுப்பலம்போடுசீவகளைத்தூள்தானப்பா, மேலானமீன்வட்டான்கூடப்போட்டு விதமானகுழியானைக்கூடப்போட்டு, காலானயிந்திரமாங்கெற்பப்பூச்சி கட்டாகவித்தனையும்போட்டபின்னே. (௱௩௨)

பின்னேதுயோகிகள்சமாதிருந்தபெறுமிடத்திலாளவட்டத்துப்புப்பார்த்து ஒன்னேதுதேடுதற்குவிளைந்தவுப்பு வுற்பனமாய்சமுத்திரத்தினுடும்புநெய்யும், பன்னேதுவித்தனையுஞ்சேர்த்துக்கொண்டு பாங்காகமைபோலேகருக்கிவெந்து, முன்னேதுகுழிக்கல்வில்விட்டுஆட்டி முகனையுள்ளவுடும்புநெய்யாலாட்டுவாயே. (௱௩௩)

ஆட்டுவாய்மற்றமருந்துகளில்லாமல் யானைக்கண்சட்டியிலே மெழுகாய்ச்சேர்த்து, கூட்டுவாய்சீவகளைகூடப்போட்டுகுழம்பானமெழுகுக்கல் லுடும்புவேண்டாம், மூட்டுவாய்லவணமும் வேண்டாமப்பா முன்மருந்துகுழியானையிந்திரகோபம், ஓட்டுவாய் மின்மட்டர்தானும்வேண்டா முப்புமுதல்மருந்தெல்லா மயக்கந்தானே. (௱௩௪)

தானென்றஆவினெய்யில்சீவகளைத்தூளைத் தாக்கியேமயனமாய்வைத்துக்கொண்டு, மானானமெழுகுக்குமருந்துகேளு மைந்தனேதிருகடுகுதூளுஞ்சேர்த்து, தேனானமண்டலமே கொண்டா

யாலுல் தினந்தோறுமிளகளவு வெருகடித்தாலும், பாலுனகொ
ண்டுவரகற்பமாச்சு பனிரெண்டுவருஷமுண்டால்சாவுபோச்சே.()

சாவேதுகட்டைக்குவாலையாவாய் தப்பாதுகவனமேபறக்கச்
செய்யும், நோவேதுமனிதருக்குவுலகிலேதான் நூதனமாய்ச்சொ
ன்னுலுங்கிட்டாதப்பா, நாவேதுபேச்சிதுக்கோ சொல்லப்போ
முர் நவகோடிசித்தர்களுங்கண்டுபோமே, பாவேதுபலியேதுச
டத்துக்கப்பா பாக்கியவானுனலேபலிக்கும்பாரே. (௱௬௬)

வழலைக்கற்பம்.

பலிக்கும்பார்வழலைகற்பமுண்ணும்போது பதியாசைநிதியா
சைபாரியாசை, சலிக்கவேயாகாதுதள்ளுதள்ளு தாரணியில்புளி
யுப்புகஞ்சாமீன்கள், நலிக்குமேகளகோடுசாராயங்கள் நலமான
புகையிலைநல்லெண்ணெயாகா, வலிக்குமேபெண்ணுசை தள்ளுத
ள்ளு மைந்தனேகிலேசமது ஆகாதெண்ணே. (௱௬௭)

எண்ணவேவெயிலாகாகாற்றுமாகா யிடும்பானமுனையென்ற
கெற்பமாகா, மன்னனைப்போல்விசாரிக்கு மதுவுமாகா மவுனம்
விட்டுவாய்ப்புலம்பிதிரியலாகா, அன்னமேபச்சரிசி பாலுமாகும்
ஆங்காரமாகாது ஆவிநெய்யாம், என்னமோவென்றுசொல்லி விட்
டிடாதே இத்தனைக்குமனமொன்றுஇயல்புபாரே. (௱௬௮)

பாரப்பாவாய்பேசாதிருக்கவேண்டும் பாவங்கள்புண்ணியங்
கள்யாதுமேது, ஆரப்பாகலிகாலப்பிரட்டர்கூடி ஆக்கிரமம்செய்
வார்களவனிமீதில், சாரப்பாமலைமீதுயேறினுக்கால் தங்கமடாதவ
மகிமைஞானிக்கப்பா, ஏரப்பாமலைமீதில்வந்திட்டாக்கால் எடுத்த
தொழில்முழுவதுஞ்சித்தியாச்சே- (௱௬௯)

சித்திக்குமனமுனைக்கில்ஞானியாவாய் திரேகமது அழியாது
சூக்ஷம்சூக்ஷம், பத்திக்கும்வாய்நீரால்மலசாரத்தால் படுமுன்னே
பழுக்குமடாவேதைவேதை, முத்திக்கும்வழியாகுங்கவனமோடும்
முதண்டகுளமெல்லாம்நீயேயாவாய், சத்திக்குபூசைசெய்யசமா
திக்குள்ளேசகலஅஷ்டசித்துவுண்டாந் தான்சொன்னேனே ()

சகலத்துக்குமையின்பெருமை.

சொன்னதொருமையினுட விபரங்கேளு சூக்ஷாதிசூக்ஷமை
தான்சுருக்குமெத்த, கன்னிமனோன்மணிபூசை முன்னேசெய்து,
கணபதிக்கும்பூசைசெய்துசித்தர்சாபம், பின்னமன்றியில்லாமற்
செவித்துநீயும் பிரதமைக்குவிஸ்த்தாரம்பேசக்கேளு, நன்னயமா
ம்பு துமையதுநாட்டுக்குள்ளே நளினமுடன்கரந்தனிலே வட்டஞ்
சூட்டே. (௱௪௧)

சூட்டியேபண்டபகிரண்டமெல்லாம் சுழிமுனையிற்காணுமடாமையின்வேகம், காட்டியேமைதீர்க்குங்கனகங்காணும் கயிலாசவீடுமங்கேகாணுங்காணும், வீட்டிமையாதேவரோடுரிஷியுங்காணும்வீற்றிருப்பார்சத்தரிஷிமையினுள்ளே, போட்டிமையாய்ச்சொல்லிவிட்டேன்மையின்வேகம் பூரணமாயுலகத்திற்பூட்டினேனே. )

பூட்டினேன்மையெடுத்து கையில்வைத்துப்பூரணமேதெய்வமென்றுபோற்றியேதான், கூட்டியேசகலபிணிநீபாறணிநமாவென்றுகும்பிட்டுவட்டமிட்டுலட்சமோதி, நாட்டினில்ஜலத்தினுள்ளேகழுவிக்கொள்ளு நமவென்றுபிணிதீருமூன்றுபோதில், ஆட்டிவிக்குஞ்சஞ்சலங்களெல்லாந்தீரும்அப்பனேமைவேகமின்னங்கேளே.

இன்னமின்னஞ்சினேந்திரத்தில்தானத்தாலும் இருபிறவிபவுத்திரத்திலணாயாப்பாதல், வன்னமிடுமூலமுளைசிரசியாதல் வதனத்தில்துடைவாளைப்புறத்திலாதல், கன்னமிடுங்கண்ணேருசை பிளவையாதல் கண்டமாலையொடுபாம்புவீக்கமாதல், இன்னமையைமேற்பூசில்வற்றிப்போகும் இல்லையென்றுநீரோத்தாலுடையும்பாரே ()

உடைந்தாலும்பஞ்சிலிட்டுப்போடுபோடு உத்தமனேயுடைந்தப்புண்ணாறிப்போகும், குடைந்தாலுஞ்சத்திரங்களிடவேவேண்டாங் குணமாகுமைப்பட்டாற்புணாகளாறும், உடைந்தாலுஞ் சீழ்சலங்களற்றுப்போகும் வுறுதிபடாபுண்ணென்ற ஆணாயாப்பெல்லாம், இடைந்தாலுமிந்தமைபோற்கிடையாதப்பா ஈசனார்மைவேகமின்னங்கேளே. (௱௪௫)

கேளடாவிழியில்வரும்வியாதிக்கெல்லாங்கிருஷ்ணனைமறைத்தாலுமவிழியிற்போடு, வாளடாவெளிபாயும்நேத்திரமெல்லாம்மஞ்சட்காமலைவரட்சிமாலைக்கண்கள், கேளடாவிழிமுழிங்கிகிருஷ்ணரோகங் குருடானவெள்ளெழுத்துமாறுமாறும், நாளடாசெல்லாதுதிருந்தீரும் நயனத்தில்தொண்ணூற்றாறுவியாதிபோமே. (௱௪௬)

போகுமேபாதசக்கரப்பிளவைபுத்தானவொளிப்புத்துலிங்கப்புத்து, போகுமேயணாயாப்பில்வந்தபுத்து பிளவையொடுமார்பாணியுச்சிமீது, வேகுமேதீய்ப்பிளவையுந்திமீது வெகுசிலந்தியெந்தெந்தப்புத்துக்குத்தான், நோகுமேதடவிவிடுநாட்பத்துக்குள் நோவெல்லாந்திருமடாபூசுபூசே. (௱௪௭)

பூசுவாய்முடக்குநோய்ச்சூனியங்கள்பொன்போலேபோவதற்குவிபாங்கேளு, ஆசுவாய்மெய்ப்பூசிக்குளிக்கச்சொல்லிஅழகுதிருமேனியாமப்பாசொன்னேன், பூசுவாய்பிரோதத்தின்விழியிட்டாலும் பூரணமேபேசுமடாசிங்கிவேகம்,காசுபோல்புள்ளிவிழும்நோய்களுக்கும் கடைக்கெட்டகுறைநோவுகுஷ்டநோய்க்கே. (௱௪௮)

குறநோவுக்குள்ளுக்குக்கொடுக்கக்கேளு குணமாகும்வெற்றி
லையில்தடவிக்கொண்டு, திறமாகநார்ப்பதுநாள்தின்றுவாநீ செடல
த்தில்வியாதியெல்லாமற்றுப்போகும்,மறவாகக்காசுபோல்விழுந்த
புண்ணும் வாங்கிப்போமெய்ப்பூசி குளிக்கச்சொல்லு, நிறவே
றும்வியாதியெல்லாந் தீருந்தீரும் நிர்மலமாயிம்மையைநிகழ்த்தி
டாதே. (௱௪௰௯)

நிகழ்த்திடவேமைபூசித்தின்பீராகில்நினைவோடேபத்தியமாய்
த்தின்னுவாய்நீ, அகத்திடவேஅவபத்தியமாகாதப்பா அப்பனே
புளியுப்பு தள்ளுதள்ளு, புகழ்த்திடவேமைகொண்டபெரியோர்
கோடி பூரணமாய்கைகண்டவேதைகோடி, நிகழ்த்திடவேநிதியெ
டுத்தபேர்கள்கோடி நேரானசிவகளைமையதாச்சே. (௱௫௰)

விஷமுஷ்டித்தயிலம்.

ஆச்சடாயின்னமொருசேதிகேளு அடங்காதபிண்டமதைவா
ங்கிவந்து, மூச்சடாபாயாமல்பதனம்பண்ணி முப்பதுநாளதுவ
ரைக்குமிருக்கவிட்டு, காச்சடாரசங்கெந்திபாஷாணம்விந்துகடும்பி
தரோகணியும்வீரம்பூரம், பாச்சடாபிராயம்வேர்க்குள்ளேகிறிப்ப
த்திரமாய்வைத்திடவ் வயனங்கேளே (௱௫௧)

வயனமென்னபலவகைக்குப்பலமுங்கால்தான் மைந்தனேமுப்
பதுநாட்கழித்தெடுத்து, நயனமென்றுவிதைநம்பி யாடைச்சுத்தி
ரசங்கெந்தியானதடாதங்கர்தங்கம், அயனுமினிபீடல்ல யாவிநெ
ய்யுருக்கி யாத்தாட்குமுன்தூக்கி யறையினுள்ளே, பயனுட
னேவிளக்கேற்றிக்குதின்கால்ரெண்டு பாலகனுருந்தியிலு வினுப்த்
தண்டே. (௱௫௨)

தண்டுவழிநெய்வடியும்பூசிக்குத்தி சாதகமாய்க்குருவிருந்து
வடிக்கவேண்டும், திண்டுமுண்டுசெய்யாதே பிராயவேர்மாவேர்
செப்பாதேயுள்ளடக்கு முன்னேயப்பா, அண்டர்களுமுனிவர்
களுமறியாவண்ணம்அப்பனேபுலத்தியனேயுனக்குச்சொன்னேன்
கண்டசெய்திமருந்துருக்கித்தயிலம்வாங்கி கனமானபீங்கானில்வா
ங்குவாங்கே. (௱௫௩)

வாங்கியேதாய்பதத்தில்வைத்துப்போற்று மறுபடிதானினியெ
ன்னுவயித்தியோரோ, தீங்கன்றியளவிறந்தநோய்க்குமாகுஞ் சிதம்
பரசக்காபூசையித்தானப்பா,பாங்குடனேவாதத்துக்கேறுமேணி
ப் பழுக்குமடாபடுமுன்னேவேதையாகும், நாங்களென்னசெய்வ
மடா யிதைப்பார்க்கத்தான் நடனவொளிகாணுமடாயாடிப்பாரோ.

ஆடியேவட்டமானகத்துக்கு அணுவளவுதொட்டுவிடுவிஷமே
யில்லை, கோடியேமகாகோடி வினையும்போச்சு கொடும்பிணிக்கு

அணுவளவுகொடுத்துப்பாரு, வாடிநீதிரியாதேமண்டலத்தில்மாயசித்துங்காயசித்துமாடிப்பாரு, மூடிநீவையாதேதிறந்துபாரு முட்டுமடாயதிதவித்தைமுடிக்கும்பாரே. (௱௫௫)

தலைமுழுகுந்தயிலம்.

முடிக்கவேசாதிலிங்கம்பலமேபத்து முறையோடேயயக்கரண்டிதன்னில்வைத்து, வடிக்கவேதயிலமதுகொஞ்சந்தொட்டு வாட்டயிலேமெழுகாச்சு சகலநோய்க்கும், பிடிக்கவேமெழுகெடுத்துவாட்டிப்போடு பிணியென்றுபிறப்பிட்டதெல்லாந்தீரும், தடிக்கானதடிவலியைக் கேட்கும்பாரு சகலவலிக்கிதுவாட்டித்தடவுவாயே. (௱௫௬)

ஏலமதுநாழிகொண்டுகுறுணியெண்ணெய்எள்ளெண்ணெய்க்கூட்டிவிட்டுமெழுகுபோட்டு, ஞாலமதில்வேகவைத்து வடித்துக்கொண்டுநன்றாகவொருத்தலைநோய்மண்டைக்குத்து,காலனெனுமண்டையிடிகுடோரநோய்கள்கனமான முகக்குத்துக்கண்ணோக்காடு,பாலமென்னபுழுவெட்டுப்பீனிசங்கள் பறக்குமடாயெண்ணெய்கண்டபடியேமுழ்கே. (௱௫௭)

மூழ்கவேசுரம்போகுந்தாகம்போகும் முனையானஜன்னியெல்லாமகன்றுபோகும், வீழ்கவேவாதமென்பதுவேயோடு மேகமென்றவிருபது மோடுமோடும், வாழ்கவேயுங்களுக்கு மெழுகினெண்ணெய் வயித்தியமாய்ச்சொன்னதடாவாதக்காடு, ஆழ்கவேநான்சொன்னசூக்ஷாசூக்ஷம் அறிந்தவனேவாதிவயித்தியனுமாமே.

வயித்தியனேயிந்தயெண்ணெய்காதிரைச்சல் மண்டையிடிமண்டைசூலையுமேதீரும், பயித்தியமாந்தலைக்கனங்களக்கினிச்சூடு பரங்கியெல்லாம்பறக்குமடாமுழுகும்போது, உயிர்த்துணையாய்ப்பிணிதீர்க்கச்சாதிலிங்கம்உள்ளமெழுக்கெண்ணெய்வகையுற்றுப்பாரு,நசித்துநீபோகாதேவேறேமாண்பர்நல்லபுத்தியுண்டாளுவிதனைச்செய்யே. (௱௫௯)

நாசிகாசிட்சை.

செய்யவேசகலசுரஞ்சன்னிநோவுஞ் சிரசிலேதேய்த்துவிடுமுன்னுள்மையை, அய்யவேயஞ்சனமாயிட்டுப்போடு மறுகவேநசியமிடுநாசிமீது, அய்யனேபறக்குமடாயறுபத்துநாலு அதிகாரச்சுரஞ்சன்னியற்றுப்போச்சு, மெய்யனவேமெழுகெண்ணெய் செகத்திலில்லை விஷமேறிச்சாவாருமில்லைதானே. (௱௬௰)

பிண்டமெழுகு.

இல்லையேகுளிர்பரப்புத்தண்ணீர்த்தாகம் யிசையானநாவரட்சியுட்சூடப்பா, தொல்லையென்றமூலச்சூடற்றுப்போச்சு தோஷ

மிக்லைநார்ப்பதுநாள்முழுகும்போது, நல்லசறிசோறுடனேயுண்
டுதேறு நயனமிதுயொளிகாணும்நன்மைநன்று, வல்லமையேயி
ந்தயெண்ணெய்வயித்தியம்பாரு மானிலத்தில்பிணிமுழுது மாண்
டுபோமே. (௱௯௧)

பிண்டநெய்.

மாண்டுபோமுன்பிண்ட வடித்தநெய்க்கு மைந்தனேரச
கெந்திபாஷாணம்வீரம், பூண்டுபோம்பிண்டமதில் விளைவாய்நி
ன்ற புதுமையடாயாருக்கும்புகலவேண்டாம், ஆண்டுபார்சென்று
லும்நெய்கண்டிட்டால் அறுபத்துநால்சரக்குமாடுமாடும், நீண்டு
பார்சூதமது மணியுமாகும் நின்றமருந்தென்னவினி நேரொவ்
வாதே. (௱௯௨)

ஒவ்வாதுகெந்திபலம்பத்துவாங்கி உத்தமனேயயச்சட்டிவுள்
ளேயிட்டு, சவ்வாச்சுபிண்டநெய்யுஞ்சற்றேவிட்டு சம்பழச்சாரண்
டமுடன்கருவுமிட்டு, கவ்வாதுவடுப்பேற்றியெரித்துப்பாரு கரு
விளல்முலைப்பாலாழாக்குவாரு, செவ்வாகவிருள்ளிச் சாறுவாரு
செய்தியென்னயாழாக்குமெழுகுதானே, (௱௯௩)

ஆச்சடாயாயிரநோயற்றுப்போச்சு அதுபோலேயிதுவுமெ
ண்ணெய் வைத்துழுழ்கு, ஆச்சரியமெழுகாலே யறுபத்துநாலு
ஆட்டையிலேமெழுகாச்சுநவலோகங்கள், பாச்சுமுன்னேபலிக்கு
மடாபேதியாகும் பலியாதுமற்றதெல்லாம்வாதமப்பா, வச்சடா
போட்டார்கள் வயித்தியங்கள் இல்லையடாநன்றுநன்று விதனைப்
பாரே. (௱௯௪)

தனைப்பார்க்கவஷ்டகுன்மமெட்டுக்குந்தான் தான்றிக்காயள
வுதின்னு நாள்பத்துந்தான், உனைப்பார்க்கவொழியுமடா கெந்தி
வேக முனிமொழியைமறவாதே மோசமோசம், உனைப்பார்க்க
வெனக்கொருத்த ருண்மையுண்டோ உலகத்தில்செந்தூர மிதற்
கொவ்வாது, எனைப்பார்க்கிலதிகமோபிள்ளாய்தானும் என்மகனே
புலத்தியனேயின்னங்கேளே. (௱௯௫)

கெவுரிபாஷாணமெழுக்கு.

இன்னமென்னகெவுரிபாஷாணங்கேளு இட்டிட்டார்பலம்ப
த்துயயச்சட்டிக்குள், முன்னமென்னகெந்திமெழு கதிலேகொ
ஞ்சம் முனையானலிங்கமெழுகதிலேகொஞ்சம், பின்னமென்னர
சகெந்திபாஷாணத்தில் பிண்டத்தின்தயிலம்விட்டுப் பிறகுகேளு,
மன்னவெகுமரிமுலைப்பாலுந்தேனு மதுவுழக்குமஞ்சளுக்கேவிரி
க்கிப்பூசே. (௱௯௬)

பூசையிலேயடுப்பேற்றியொடுக்குத்தீயேபூட்டிடவேவுள்ளிச்
சார்விட்டுப்பாரு, ஆசையிலேகைபாகமறந்திடாதே ஆசானுங்கூ

டவைத்துயடவுகேளு, காசையல்லோகொள்ளைகொள்வாரொ[illegible]று
நீயும் கைவிட்டாலாசானைக்காணலாமோ, பேசையிலேவேறுநினை
வாகாதப்பா பிரளிவருஞ்சற்குருவும்பிசகார்பாரே. (௱௬௭)

பிசகாதுமஞ்சள்கெவுரிமெழுகுமானால் பிழைப்பதற்குவினி
யென்னதாயுமாடும், நிசமாகும்வாதவயித்தியங்களப்பா நினைக்கு
முன்னேகுருமுடிக்கும்நிமிஷம்பாரு, கசமாகுமென்றுநீவிட்டிடா
தே கைவிட்டால்கணையேற்று மில்லைதள்ளு, பிசகாதேவாதிகளே
தற்கம்பேசிப் பேசாதேபேசாதேவணங்கிக்கொள்ளே. (௱௬௮)

வணங்கவேகெவுரிவந்து வாய்க்கும்வாய்க்கும் வணங்காட்டா
லொன்றுமில்லைமாய்கைமாய்கை, இணங்கவேபலனுண்டுசுகமுமு
ண்டு இணங்காட்டால்பிள்ளையில்லை பலனுமில்லை, அணங்கனுரா
சைவிட்டு வெளியைப்பாரு அன்னையபிராமிமனோன் மணியை
க்கேளு, டணங்களேபிரதானமாகவெண்ணிப் பக்கத்திலலையாதே
ஞானம்பாரே. (௱௬௯)

ஞானமப்பாமுன்னோர்கள்தேடிவைத்த நவம்ப்பாகைக்கொ
ள்ளுமதுவேவாதம், மானடிப்பாயில்லாட்டால்ஞான மில்லைவயிற்
பிழைப்புதவசாண்டிமார்க்கமெல்லாம், மீனமப்பாவித்தைகளுக்
கிட்டுண்டாக்குமின்பதுன்பமிரண்டுக்குமீசனொன்று, தானமப்பா
விம்மட்டுந்தெரியாவிட்டால் சன்னுசியாரடாயுலகத்தோரே (௱௭௰)

உலகத்துக்கெவுரிமெழுகென்னசொல்வேன் உத்தமனேயள
வறந்தவித்தையாகும், சகலத்துக்கிடம்வைப்பா ரவரோடென்ன
காரியந்தானறுபத்துபலமேவாங்கி, திலகத்தையுருக்கையிலேகெவு
ரிதாக்கு சிறுமிளகுயளவாகவிட்டுப்பாரு, உலகத்தில்தங்கமதுபத்
தேயாகும் உன்னுணவயித்தியத்துக்கூணிப்பாரே. (௱௭௧)

ஊணிப்பாரொத்தெந்த நோயுக்கெல்லாம் ஒருபோதுயிரு
போதுரண்டுபோதும், பாணிப்பாய்போய்விடும் நோய்களெல்
லாம் பறக்குமடாகெவுரிகண்டபோதேதானும், ஊணிப்பார்சுர
ங்களுக்குமிதுவேயாகும் உள்ளவலுபிணிகளுக்குமிதுவேயாகும்,
ஆணிப்பார்நிலைக்குமடாமருந்தின்வேகம் ஆனந்தவாயுவுக்குமருந்
துவாயே. (௱௭௨)

அருந்துவரத்தழுவாயுவுமிடைதானும் அடைப்புவலிநெஞ்சடை
ப்புவிக்கலெல்லாம், பரந்துமேபோகுமடாபாரிசவாயுவுபல்லற
ணைபற்குத்துப்பறக்கும்பாரு, இரந்துமேயெழுந்திரியாதிடிக்கும்
வாதமிருத்திவிடும்பிடிப்புவலிதலைநோவெல்லாம், மருந்துதான்க
ண்டவுடன் தெண்டன்பண்ணு மண்டலத்தில்கொண்டுவிடு காளி
பூசை. (௱௭௩)

பூசையினுந்திரண் டெழுந்தகோரவாய்வு பிடிமூர்ச்சைவாயுவுக்
குக்கொடுத்துப்பாரு, பேசையிலேநாவிழுக்கும்வாயோகோணும்
பின்னிழுக்குமுன்னிழுக்கும்நகைப்பார்மாண்பர், ஆசையென்றமூ
ர்ச்சைநோய்க் கொண்ணேக்கெல்லாம் அப்பனேயெண்ணெயிலே
கெவுரிமேழ்கு, ஓசைபெறவுரிக்கிவிட்டு முழுகிவாநீஉள்ளுக்குமூன்
னுநாள்மெழுகுதாக்கே. (௱௭௪)

தாக்கையிலேகொண்ணேயெங்கேகுளறலெங்கே தடைப்படா
தொருநாளுந்தானேதீரும், வார்க்கையிலேமனமிரண்டுமாண்பரு
க்கு மங்கையற்கும்விளக்கெண்ணெய் முழுகச்சொல்லு, சேர்க்
கையிலேவுள்ளுக்குந்தாக்குதாக்குசிறந்தவலிப் புருஷிருக்குந்தீருந்
தீரும், கார்க்கையிலேபத்தியமாய்க்காருகாரு காதனுடன்காதலி
யைமேவுவாறே. (௱௭௫)

மேவுவார்திருக்குணக்கமதுவுந்தீரும் வெறிதீருமாய்கையுள்
ளதெல்லாந்தீரும், மேவனுள்ளபேய்பிணிகள்பில்லிசூன்யம் மெதி
ரிவைப்புப்பிசாசுவகையெல்லாந்தீரும், சாவுபோங்கெவுரிமெழுக
தனுலப்பாதானதற்குரசகெந்திதயிலமூட்டு, தாவுவீர்சமாதிகெர்ப்
பங்கெவுரிபூசை தாய்பதத்தையர்ச்சித்துவாதம்பாரே. (௱௭௬)

வாதநோயென்பதுமே யிதனில்தீரும் மண்டலமேமெழு
கெண்ணெய்முழுகும்போது, சீதமேசிரங்குகுஷ்டங் கரப்பன்
போகும் சலந்தனிலேமுழுகிவிடுபத்துநாளும், பூதவலிவாய்விடு
ப்புசந்துநோவும் பொரிப்பொரியாய்ப்பெற்றெடுக்கும் பொன்
போல்வாயுவும், நாதமற்றப்பிணிகளெல்லாந்தீருந்தீரும் நாற்பது
நாள்முழுகிவரயெண்ணெய்கேளே. (௱௭௭)

சர்வமேகரோகராஜாங்கத்தயிலம்.

எண்ணெயிலேயெள்ளெண்ணெய்படிநாலப்பா வியல்பான
கெவுரிமெழுகதுதான்கேளு, வண்ணமுடன்களஞ்சியதுநாலுபோ
டுமகரப்பூசசகசாகஞ்சாச்சாறு, நிண்ணயமாய்நாழிவிடுகார்ச்சிமூழ்
குமிகுவானபிணிகளெல்லாமிதுவேயெண்ணெய், கன்னத்தில்வந்த
பிணிதீர்ந்துபோகும் கைகண்டமருத்திதடாகண்டுபாரே (௱௭௮)

கண்டுபோர்பிசாசிக்கும்பிணிக்குமாகும் கால்முடக்கல்மேல்
வீக்கங்கடுப்புங்காந்தல், பண்டையிலேகுடல்வாயுவு பலசூடெல்
லாம் பத்துநாள்முழுகையிலேதிருந்தீரும், கெண்டையொடுவலி
குன்மச்சூடுந்தீரும் கிறுமிகளும்பூச்சிகளு மொழிந்துபோகும்,
அண்டமுளைமூலமுளைமெல்மூலத்து அப்பனேமெழுகதனை வடி
த்துக்கட்டே. (௱௭௯)

### சகலரோகத்திற்கு மெழுகு.

கட்டினால்மூலமதுவிழ்ந்துபோகும் கடைசியிலேபுண்ணுறு
ம்வரையுங்கட்டும், எட்டுநாள்செய்துவிடுகளிம்புபோலே எந்தெ
ந்தபுண்ணுக்கு மிளக்கிபோடு, வெட்டுநாலகடுபட்ட புண்ணுக்
கெல்லாம் வெற்றியுள்ளகெவுரிமெழுகிளக்கிப்போடு, மூட்டினால்
மஞ்சள் மெழுகிளக்கிரோகி மெழுகோடேரோகித்துப் போட்டி
டாயே. (௱,௭,௰)

### குன்மத்துக்குமந்திரம்.

போட்டிடவேகுன்மமதுவெட்டும்போக பூட்டுவேன்கர்மா
திகிரிகைக்கேளு, நாட்டிடவேநார்க்கோணம்வயித்திலோட்டு நாற்
பதுநாள்வயிறுதொட்டுநசியோமென்று, மூட்டிடவேமுகத்திலே
புறையையோட்டு மூனைசுழியிலய்மென்றுமூட்டுமூட்டு, ஆட்டிட
வேநாற்பதுனாளோதும்போது அற்றுதடாகுன்மவலி யனைத்தும்
பாரே. (௱௮௧)

### தலைவலிக்கு மந்திரம்.

பாரடாதலையிடிக்குந்தலைக்குத்துக்கும் யாங்கானவொருதலை
நோய்க்கபாலநோய்க்கும், நேரடாயறுகோணஞ்சிரசிலோட்டுநி
னைவாகசடாக்ஷரத்தினெழுத்துமோட்டு, கூரடாவாமதேவா யோ
ம்யோம், குமேடாரிவிடுதனியென்றுநூறுவோது போரடாவென்
றுதலைநோவெல்லாந்தான் பொடிப்பொடியாய்நீறுகிப் போகுந்
தானே. (௱௮௨)

### கண்ணோய்க்குமந்திரம்.

தானென்றகண்ணில்வரும்வியாதிக்கெல்லாந் தனியானவட்ட
மிட்டுப்புனையுள்ளிட்டு, வானென்றநகாரமிட்டுவிதழ்நூலிட்டுமகார
மிட்டுக்கட்டியேயோங்காரங்கொண்டு, காமென்றநேத்திசயருத்தி
ரதேவாய்க்கருணையொளியோவென்றுகருது நூறு, ஏனென்றநாற்ப
துநாள்கோறிச்சேவி யெடுப்படுமேநோயாளிச்சுத்தம்பண்ணே ()

### நாசி செவிநோய்க்குமந்திரம்.

பண்ணவேசெவியில்வரும்வியாதிக்கெல்லாம் பாரொழுதிசதா
சிவத்தைச்செபிக்கத்தானும், கண்ணவேயங்கிசதாசிவாயவென்று
காணப்பாலட்சமுருசித்திபண்ணு, நிண்ணதோர்நாசியிலுள்ளநோ
ய்க்குநிறுவாணிசுவவாஒருபிநிதியென்று, மண்ணவேநூறுருப்போ
டும்போது மண்டலத்தில்நாசிநோய்வாங்கிப்போமே. (௱௮௪)

### சிரநோய்க்கு மந்திரம்

வாங்கிப்போஞ்சென்னியுச்சிபிளவையாதல் மண்டைகுலை
யோடுரவுமார்க்கமெல்லாம், தாங்கித்தான்தலைத்தொட்டுவட்டமிட்
டு சர்வபிணிசாடாய் ஓம் ஆமென்று, ஓங்கித்தான்கைநொடிக்கவுயர

ட்பார்த்து ஓதிடவேயுள்ளபிணியெல்லாம்போச்சு, நீங்கித்தான்கன் ஞேசிகன்னச்சூலை நீதிகெட்டகன்னத்தில்சிலந்திதானே. (௱௮௫)

சிலந்திமந்திரம்.

சிலந்திக்குமகாரமிட்டுமசியென்றேது தீர்க்குமடா லட்சமுரு வேற்றும்போது, நலம்புகழுங் கண்டத்திற் பிணியெல்லாமசி நசியென்றுவோங்காரங்கூட்டிச்சேவி, மலர்ந்தபுஷ்பமாத்தாளுக் கர்ச்சிப்பாயப்பா மகத்தான நோயகனுமணியகனுமப்பா, பலந்தருமேவியாதிநிவாரணமேபண்ணும் பாரடாசாபமெல்லாம்பறக்கும் பாரோ. (௱௮௬)

உந்திமந்திரம்.

பறக்குமேமார்பாணிநெஞ்சிலாணி பதைப்பாணிகழுத்தாணிகடகத்தாணி, சிறக்குமேயெழாதபடியறுபத்தொன்று செப்பையிலேபடபடென்றுசேவிசேவி, இறக்குமேலக்ஷமுருவானலப்பா ரூறீங்காரமிட்டுச்சேவிசேவி, உறக்குமடாயாணியெல்லாங்கழலும்பாரு உத்தமனேஉந்தியின்மீதெழுந்தநோயே. (௱௮௭)

வாந்திபேதிசகலவியாதிக்குமந்திரம்.

நோயானவுந்தியிற்பிணிகளெல்லாம் நூதனமாய்ச்சொல்லவில்லைமாந்தரீகம், வாயாலேசொன்னாலும்பாவம்பாவம் மாரணசிம்மாரணமாமசிநோயென்று, தாயானுஞ்சொன்னாலும்பிணிகள் தீர்ப்பான் தூம் தூம் சூ சூ சூ சூ வென்று, சாயாமல்சேவியடா யுந்திப்பீடை தானொழியும்லக்ஷமுருதாக்குதாக்கே. (௱௮௮)

தாக்குவாய்விலாவாளியோடுபாம்பு தடிச்சிலந்திபடுவன்றன் மூர்த்திகேளு, வாக்கினல்படபடென்றுலக்ஷஞ்சேவிவாயறுத்து வாங்கிவிடுமசிநாவென்று, வீக்கமறவுருசூவென்றுசேவிசேவியாதி யற யற யற வென்றேத்தியேத்து, நோக்குமுன்னேபறக்குமடாபிணவ்வயெல்லாம் நோய்களெல்லாஞ்சடலமிட்டு வோடிப்போச்சே. (௱௮௯)

விநாயகர்பூசைமந்திரம்.

ஓடிப்போமென்னுடையமாந்தரீகம் உரைத்தவெண்ணாயிரத்தில்சருவத்தினிற்கும், நாடிப்பார்வயித்தியருக் கிதுவோகொஞ்சம்நான்தூண்டிக்காட்டினதும்நலமாமப்பா, வேடிக்கைவியாதிக்குச்சூட்டிப்பாருவிளம்புமுன்னேபிணியறுக்கும்விநாயகற்கு, தேடிப்பார்பலகாரம்படைப்பாயப்பா தீருமடாவினைகளெல்லாந்தீருந்தானே. (௱௯௰)

மூகத்துவியாதிக்குமந்திரம்.

தீருமடாமுகக்கோட்டில்வந்தநோய்க்கு செப்புவாய்மயேஸ்பாத்தியாணியென்று, கூறுமடா வீ வீ வீ றீ றீ றீ றீ யென்றுகோ

ளொன்றுவாசாமல்செபிப்பாய்ப்பா, ஆறுமடாநாளெட்டில்வியா
திதீரும் ஆக்கிரமவியாதிக்குமிதுவேவேண்டும்,சேரடாமந்திரமும
ருந்துமொன்றாய்ச்சேகரித்தால்பிணியுண்டோ?சொல்லுசொல்லே

### தோட்சிலந்திப்புடைகளுக்குவீரபத்திரமந்திரம்.

சொல்லவேகைக்கட்டுத்தொடைச்சிலந்தி துயரானபுண்புடை
ப்புமகாவியாதி, வல்லமையாய்வந்ததெல்லாமாண்டுபோகும் மசி
மசியாமசிமசியாவாவீயென்று, வெல்லடாலக்ஷமுரு தொட்டு
வோது வெடிக்குமடாபார்த்திருக்கவீரபத்திரன், அல்லவடாவரு
வதுதேவதையாள்குற்றம் அதுநிறுத்தமந்திரமிதுவுமாமே(௱௯௨)

இதுவிட்டுமுழங்கைமணிக்கட்டுக்குள்ளே எழுந்தவியாதிக்கெ
ல்லாங்கேளுகேளு, பதிவிட்டுப்பெருபாகி சலநீயென்று படப
டென்றுலக்ஷமுருபாருபாரு, இதைவிட்டுக்கணபதியின்மூலங் கூ
ட்டி எத்திடவேவியாதியறுமறுமேயென்று, பொதுவிட்டுவெகுபி
ணிக்கு மிதுவேமந்திரம்பூட்டிப்பார்வோமென்றுப்பூணுபூணே ()

### முதுகுவியாதிக்குமந்திரம்.

பூணவேமுதுகில்வரும் வியாதிக்கெல்லாம் புரபுராரிபுரவெ
ன்றுசேவிசேவி, ஆணவேபின்தோளில் மேற்பக்கத்தி லந்தநோ
ய்கங்கரிசங்கரியென்றோது, தோணவேபிடரிவரும் பிணிகட்கெல்
லாம்துற்கைசொரிநமசிவயவென்றேயோது. பெணவேகீழ்முது
குவியாதிக்கெல்லாம் பிரணவமேதுரிசுரியென்றுகூறே. (௱௯௪)

கூறடாபின்முதுகுநடுத்தானத்தில், குறியுடனேபிளவைத்தா
னகத்தில்வந்தால், வாறடாயறியறிசுவாகியென்று ஆயிரத்தெட்டு
ருவோதுயனுஷ்டித்தாலே, பேறடாபிரணவங்கொண் டோது
வோது பிரணவமேகுருவாச்சுமாந்தரீகம், நீறடாவினையறுக்கும
றுகோணத்தை நிறுத்திடவேபிளவநோய்நிர்த்துளாமே. (௱௯௫)

### புண்சிரங்குக்கு அரையாப்புக்கு மந்திரம்.

நிர்த்துளாஞ்சகுனத்துநோய்கட்கெல்லாம் நிற்பகமேநிமல
மேரங்ரங்கென்று, சொர்த்துளாயோதிடவேயிருநூறப்பா சுப்பி
ரமண்ணியர்கிருபையினால்தீருந்திரும், கர்த்துளாம்பவுத்திரத்தா
னத்துக்கு கரிகரியென்றறுவென்றுகருதியோது,நிர்த்துளாம்லக்ஷ
த்தில்நாளெட்டுக்குள் நீங்குமடாபுண்ணாறுமருந்துதானே ()

மருந்தென்னயரையாப்புரெண்டுபக்கம் வந்ததென்றால்அர
அர-றீ-றீ-யென்று, இருந்துதான்நூற்றெட்டுசொல்லிவிட்டு இளங்
கோதைத்தண்டறுத்தாப்போலேவைத்து, பொருந்துமேயண்ட
த்தில்வந்தநோய்க்குபூட்டுமே-மறமற-இரீஇரீயென்று,வருந்துமே
ஆயிரத்தெட்டுமோது வாங்குமேபோதமென்றமருந்தினாலே ()

### லிங்கப்புத்துக்குமந்திரம்.

நாலுகின்றலிங்கத்தில்வந்தநோய்க்கு நலமானபுத்தூக்குஞ்சுலைக்குந்தான், ஏலுகின்றவியாதிநீபாரணிசோபதியென்று மெய்த்துவாய்நூற்றெட்டுஏலுமேலும், கேலியென்றுசொல்லாதே தானம்பார்த்துக்கேசரியாந்தியானத்தைமூட்டுமூட்டு, போலியென்றுபோய்விடுமேவியாதியெல்லாம் பூரணமேஅரைக்கிக்கீழ்புகலத்தானே. (௱௬௮)

### துடைவாளைசிலந்திக்கு அனுமன்மந்திரம்.

புகலுவேன் துடைவாளை விற்புருதிபுரச்சிலந்திகுளச்சிக்குள்புண்ணெல்லாமல், முகலுமேமூட்டுக்குள்கெண்டைக்காலில் முழங்காலில்கணைக்காலில்கண்டைக்காலில், புகலுவேன்பாதசக்கரம்பிளவை சூலை புகழானபடுசிலந்தி யெதுவானாலும், நிகலரியவாய்வுபுத்திரன்அனுமன்மந்திரம் நீயோதூ அனுமந்தாநசியென்றோதே. ()

ஓதுவாய்ஓம்நமஅனுமதேவா உறுபிணியைநசிநசிஓமென்றோது, பாதுதானுகாராதுபிணிநோயப்பா பறக்குமேயனுமன்பேர்சொன்னபோதே,யாதுவிதிபிணிக்குமந்திரமிதுதானப்பாயான்சொன்னவியாதியறமாந்தரீகம், ஏதுவிதிசுத்திசெய்துமருந்தூட்டி இந்தவிதிமந்திரத்தாலிரைஞ்சுவாயே. (௨௱)

### வாதப்பித்தச்சிலேத்துமத்துக்குகிரிகையும்அவிழ்தமும்.

இரைஞ்சிடவேவாதத்தால்வந்தநோய்க்கு விசான்யபொங்கலிட்டுதியானம்மாது, உரைஞ்சிடவேபித்தத்தால்வந்தநோய்க்கு உடையவற்குவிந்திரனுர்க்குகந்தபொங்கல், விரைஞ்சிடவேசிலேற்பனத்தால்வந்தநோய்க்கு மேதினியில்தேட்சணுபொங்கலிட்டு, குரைந்திடவேவேகுளித்துமேமருந்தூட்டுக் குணமாகுந்தீராதபிணியும் போமே. (௨௱௧)

### பாஷாணமெழுகுவேதை.

பிணியோகபாஷாணமெழுகுகேளு பெரியவெள்ளைபாஷாணம்பலம்பத்தப்பா, அணியாகத்தாம்பரத்தைச்சட்டிலிட்டு அதுதனிலேகதலிச்சாரளந்துவிட்டு, துணிவாகக்கெந்தியின்தயிலம்விட்டுச்சொற்பெரியமூலைப்பாலீருள்ளிச்சாறும், தணியாதமதுவிட்டுவஸ்த்துவிட்டு தானெரிப்பாய்மெழுகுபோல் வருகும்பாரோ. ()

வருகுமேமெழுகெடுத்துலிங்கமெழுகு வளர்கெந்திமெழுகோடுகெவுரிமெழுகு, இருகுமேநாலுமொன்றாய்ச்சேர்த்துக்கொண்டுவீயமென்றவெள்ளியந்துலாமொன்றுக்கு, உருகுமேஅப்போதுகால்களஞ்சித்தாக்கு உத்தமனேசரிகைவெள்ளியிதற்கொவ்வாது,

அருகுமேயிந்தவெள்ளிசேர்த்துருக்க, அப்பனேவகைகேளு அரை
கிறேனே. (௨௱௩)

வெள்ளிசெந்தூரம்.

அரைகிறேனந்தவெள்ளிதுண்டுதுண்டாய் அளவாகவெட்டி
யொருஅயச்சட்டிக்குள், முறையுடனேதான்போட்டுக்கல்லுடும்பு
முன்ளெலிநெய்விட்டுமெதீயைமூட்டி, உறையுமோர்மணவாசங்கெ
ந்திநெய்யும்உரையுளத்ததேவதார்குச்சிகொண்டு, குறையாமற்கிண்
டிவரநீர்வற்றுமானால் கொடுஞ்சுறுக்குசெந்தூரமாகும்பாரே. ()

ஆகுமேசரிகைவெள்ளிசெந்தூரித்தால் அளவறந்தரோகமெ
ல்லாமற்றுப்போகும், சாகுமேமெழுகாலேசகலநோயும் சண்
ணும்டாகெவுரிகெந்தி லிங்கம்வெள்ளை, ஏகுமேவியாதியெல்லா
மெங்கேபோச்சு நமன்போனன்சாவில்லையிகத்திலப்பா, வாகு
பெறச்சொல்லிவிட்டேன்செந்தூரத்தின் வாதமினிகேளடாவயித்
தியோரே. (௨௱௫)

வயித்தியனேசெந்தூரம்ஒருமாவீய வங்கமென்றகாரீயந்த
ங்கமப்பா, பயித்தியதாம்பூரந்தான்தங்கமாச்சு பாங்கானநவலோ
கந்தங்கமப்பா, வெயித்தியாய்சரக்கெல்லாங்கட்டிப்போச்சு வே
தையிலுமகாவேதை பாருபாரு, நயித்துநீபோகாதே வெளியிற்
போட்டு நாய்போலேயலையாதே சொன்னேன்கேளே. (௨௱௬)

சொன்னவெள்ளிகயிலாசசெந்தூரத்தை சூட்டிப்பார்வியா
திகளுக்கனுபானத்தி, லின்னபடியென்று நான் சொல்லாவிட்டா
லின்னபடியென்றறியாய்நீயுமப்பா, கன்னிமுலைப்பால்க்கூட்டிமூ
ன்றுபோது கட்டுடனேயிட்டிடவே சொல்லக்கேளு, சன்னிபதி
மூன்றெங்கேபிரவீச்செங்கே சாத்தியமசாத்திய மெங்கேதாக்கி
ப்பாரே. (௨௱௭)

பாரொன்றசூலைபதினெட்டுக்குந்தான் பக்குவமாம்பனவெல்லம்
கொடுத்துப்பாரு, நேரப்பாதூளாகும்சூலைரோகம் நினவாகப்பத்
தியமாயுண்டுதேறு, ஆரப்பாபரங்கிக்குங்கரப்பனுக்கும் அதினாலே
வந்தகுஷ்டம் பதினெட்டுக்கும், சாரப்பாசங்கங்குப்பிச்சாறுழக்
குத் தாக்கிப்பார்பணவிடைமூன்றுபோதே. (௨௱௮)

போதுமேகண்டமாலைஅரையாப்புக்கும் புண்புரைகள்அண்
டசூலையண்டவாதம், வாதுமேஆவின்வெண்ணைதன்னிலேதான் மை
ந்தனேபணவிடைதான் மூன்றுநாட்கொள்ள, வேதினைகள்தீருமட
டாசுத்தமாகும்மீனிறச்சிமான்புணர்ச்சிரண்டுந்தள்ளு, தீதுமேவா
ராதுசெந்தூரந்தான்சிலேத்துமந்தொண்ணூற்றாறுந்தீருங்காணே.

காணவேசிலேத்துமங்கள்தீரக்கேளு கருதுவோம்சயத்துக்கு யீளைக்கக்கல், பூணவேபணவிடைத் தேனிற்கொள்ள போதாறு நாள்மூன்றிலொழிந்துபோகும், தாணவேகட்டையின்மேல்ப்பி ரேதம்வாயில்தாக்கிடிலரிசியிடைசெந்தூரம்பால், தோணவேகொ டுத்தாக்கால்தாதுண்டாகி சுகமாகவுயிர்வந்துவிழிப்பான்பாரே.()

விழித்தவனுங்கடிகையொன்றுமரணமாவான் விதியிருந்தால் பிழைப்பான்பார்விதியில்லாட்டால், ஒழித்தவனும்போய்விடுவான் யாசித்தப்பா உத்தவெளிசெந்தூரத்துறைப்புச்சொன்னேன், பழி த்தவனுந்தலைவெடித்துநரகில்வீழ்வான் பாக்கியவான்புகழிப்பான் பாரின்மீது, கழித்தவனேவயித்தியனுமுலகமீதில் காக்ஷிபெறவின் னமுண்டுமருந்துதானே. (௨௱௰௧)

மருந்துதான்முளகோடுபாஷாணத்தை வளரவுரிச்சாறுவிட்டு யரைப்பாய்சாமங், குருந்தானமிளகுபோலுண்டைசெய்து கொ டுத்திடுவாய்சன்னிசுரங் குடிபோச்சப்பா. விருந்தானபோதுக்கு குளிகையொன்று வேர்க்கொம்புகிஷாயத்தில்மூன்றுநாள்தான், இ ருந்தாடுஞ்சுரங்களெல்லா மெங்கேபோச்சு இன்னீரிலாறுநாள்மு ழுகுவாயே. (௨௱௰௨)

தயிலம்.

முழுகுவாய்கருனொபிபலமொன்றுக்கு மூத்திரத்திலூறவிட்டு மூன்றுநாளும், கழுவுவாயதின்பிறகுகுமரிச்சாற்றில் கடிகைபத்து யரைத்திடுவாய்காடிநீரில், தழுவுவாயிளகுமட்டுமரைப்பாய் சாம ம் தைவேளைமேனிச்சாற் சாமம்ரெண்டு, குளிகையாயதின்பிறகு நிழலுலர்த்திக்கொண்டுதான்சுரங்களுக்குக் கொடுத்துப்பாரே. ()

கொடுக்கவேவாதபித்தசுரங்களெல்லாம் குடிப்போகுஞ்சிலே த்துமத்தின்சுரங்கள்கூட, கடுக்கவேவதிசாரசுரமுங்கூட கழிச்சலு டன்விடாதடிக்குந்தாகந்தானும், படுக்கவேயொட்டாதுசுரசன்னி க்கும் பற்காட்டும்பலிப்பினுக்குமசுப்பீடைக்கும், கடுக்கையின் கியாழத்தில் குளிகையொன்று கண்டிடவேசன்னிபதி மூன்றும் போமே. (௨௱௰௪)

போமடாவிஷபாகஞ்சுரங்காமாலை போகசுரஞ்சயபாண்டுசு ரநீராமை, வேமடாவயிறறிவுகாந்தல்காச்ச லீளைவிச்சுரமுங்கள் காந்திரோகம், ஓமடாகுன்மசுரம்: வுஷ்ணபீடை உடலுருக்கிதள ற்சூடுசுரங்கள்சோகை, ஏமடாவந்தாலுங்குளிகையொன்று இஞ்சி ச்சார்முலைப்பாலுந்தேனுங்கூட்டே. (௨௱௰௫)

கூட்டியேவெள்ளுள்ளிதயிலமூட்டி கொடுத்துப்பார்சன்னி சுரங்குடிப்போச்சப்பா, ஆட்டியேமற்றதற்குயிளவென்னீரும்அறு

கம்வேர்கியாழத்திலருந்திப்பாரு, ராட்டியேசுரம்போகும்பரப்பு
த்தீரும் நலமானவூஷ்டிணங்கமொழியுந்தாகம், பூட்டியேபூரண
சந்திராதிமாத்திரைப் புகலுவேன்புலத்தியனேசுரங்கள்தாமே. ()

## பூரணச்சந்திரோதயமாத்திரை.

சுருங்கமுறுஞ்சாதிக்காய்விடையஞ்சுக்கு சீர்மதுரந்தேவதாரம்
அரத்தை, கிரும்புடனேயேலமுமமுக்குருவுங்கிளர்ந்தவெளாவரிசி
நன்னாரிவேரும், துரங்கமொடுவால்மிளகுகருவாய்ப்பட்டை சூரி
விரையாழாக்குகெருடப்பச்சை, இரங்கமுருசோடசம் பதினறப்
பா இந்தமருந்தத்தனையுஞ்சீந்திச்சாறே. (உ௱௰ள)

சீந்திச்சார்தனிலரைப்புநாளொன்றப்பா தீர்ந்தபின்புகொடு
ப்பைச்சார்நாளொன்றப்பா, சார்ந்தகமாவோரிலைத் தாமரையின்
சாறு சருகாமல்நாளொன்றுயரைத்துக்கொண்டு, வேந்தனேமிள
களவுகுன்றிவீத மிகவுந்தான்சுண்டக்காயளவுருட்டி, வாந்திப்பார்
சிறுகுழந்தைக்கப்பால்கேளுமண்டலமேமிளகளவுகுளிகைதானே

தானானகுளிகையதுயாவின்பாலில் தானுண்டுவரக்குளிகை
சகலநோயும், போமெனபெரியாளுக் கேதான்கொள்ளு பூமியி
லேசுண்டைக்காயளவுமாத்திரை, ஆறுவுமமுதன்னுங் குழந்
தைக்கெல்லா மப்பமேனகுன்றியளவானமாத்திரை, தேனுகும்பா
லாகுஞ்சீனியாகுந் தின்றுவரமண்டலத்தில்தேகம்பொன்னே. ()

பொன்னுகுமாத்திரைதான்தின்பீராகில் பூமியிலேநோயில்லை
சூடுமில்லை, மன்னனைநமனில்லைவாதபித்த மாருட்டம்பண்ணு
துவளருந்தேகம், என்னுணவெகுசவுக்கியம்போகபோகம் இன்
பமடாதுன்பமில்லையிதற்குத்தானே, உன்னுணேசுரங்களுக்கு மிள
வெந்நீரில் உரைத்திடவேயுண்டையொன்றிலொளியும்பாரே. ()

## செயராமபாணம்,

ஒளியுமடாசெயராமபாணங்கேளு ஒன்பதுபாஷாணமோர்
நிறையாய்வாங்கே, குளியுமடாகுழிக்கல்லில்விட்டுநீயும் கொடுவே
லிதைவேளைக்குப்பமேனி, விளியுமடாசிறுதும்பைபேய்க்குமட்டி
வேப்பிலைவாதம்மடக்கியவரிக்கொத்தான், தெளியுமடாயொன்பது
சார்வொன்பதுளாட்டி சிறுபயறுபோலுருட்டியுலர்த்திடாயே.

உலர்த்தியேநாலாயிரத்துச்சில்வாணமும் உற்றபிணிக்கனுபா
னமிஞ்சிச்சாறு, புலத்தியனேபித்தசுரமனைத்தும்போச்சு புகழா
னவாதசுரமுலைப்பால்பூணு, நிலத்திலேசிலேத்துமசுரத்துக் கெல்
லாம்-நேரானமிளகு கியாழத்திற்கொள்ளு, தலத்திலேமூன்றுநாள்
கொள்ளும்போது சகலசுரமொழியுமது தான்சொன்னேனே. ()

சூலரோகத்திற்குத்தயிலம்.

சொன்னசொரிசூலக்குயிளவென்னீராம் சுரோணிதசூலக்கு விஞ்சிச்சாறும், கன்னமுறுசூலக்குவிளவென்னீராங் கடிசூலவெடிசூலகபாலச்சூல, சென்னியிலேவருசூலகண்டச்சூல திரிசூலயிதறமெல்லாமிளவென்னீராம், மன்னுவலிசூலயுரிசூலப்புண்ணாய் வடிசூலமற்றதற்குவிளவென்னீரே. (௨௨௩)

நீரிலேயுனாத்தருந்துநோயைக்கண்டுநினவாகப்பத்தெட்டுநாள்தானப்பா, பாரிலேகடும்பத்தியஞ் சூலநோய்க்குப் பாங்கானயெண்ணெய்வகைபகருவேன்கேள், மேரிலேயெழுதிவைத்தபாகம்போலே விளக்கெண்ணெய்குறுணியடாவிழிதிச்சாறு, வீரிலேகுறுணியடா சித்திரமூலம் வேர்பலந்தான்பத்தரைத்து வேதிப்பாயே. (௨௨௪)

வேதிப்பாய்கார்போகவரிசிபலம்பத்து மிகுந்தகருஞ்சீரகம்பொடித்துப்போடு, சோதிப்பாய்மஞ்சளுமெழுகுபலமொன்று சாம்புருணிவெள்ளைகுந்தரிக்கம்போடு, ஓதிப்பார்வேகவைத்துவடித்திறக்கி உடையவற்கும்விநாயகற்கும்பூசைசெய்து, நாதிப்பாய்சங்கொலியால்மணிகளாட்டி நாள்பார்த்துமுழுகுபதினெட்டுச்சூல. (௨௨௫)

சூலபதினெட்டுமேயோடிப்போச்சு துணையெண்ணெய் நவபாஷாணத்தாற்கு, மாலையிலேயெண்ணெயிட்டுவென்னீருதல் மைந்தனேயாறவைத்து முழுகச்சொல்லு, சோலையிலேத்திருமடாமண்டலத்தில் சூலயென்றவாதமெங்கேமேகமெங்கே, காலையிலேமருந்துண்டு பத்தியங்காரு கண்கண்டவயித்தியரே காணுகாணே. (௨௨௬)

பயித்தியத்திற்குச்சஞ்சிதத்தயிலம்.

காணவேபயித்தியங்கள்தீரக்கேளுகையான்சார்விஞ்சிச்சார்கருவேம்பின்சார், பூணவேபொடுதலைச்சார்சம்பழச்சார்பொற்கொடுப்பைபொற்சீந்திமுசுக்கைச்சாறும், நாணவேவகைக்குவகைதாழிவாங்கி நல்லெண்ணெய்நாழியாவின்பால்வீதம், தோணவேவிட்டொன்றாய்க்காச்சும்போது சொல்லுகிறோம்கடைசரக்குகேளுகேளே. (௨௨௭)

கேளடாபலாக்காயின்தேவதாரம் கிளியூரல்பூலாவும் வெட்டிவேரும், கேளடாவிலாமிச்சன்வேருங்கூட்டிக்கிராம்பேலஞ்சாதிக்காய்முந்திரிகம், நாளடாசந்தனமும்பலமொன்றப்பா நலமானபுனுகுசட்டஞ்சவ்வாதுபோது, கேளடாவில்வவேர் சேர்த்திடித்துக்கெட்டியாய்க்காச்சுவடிமெழுகுகண்டே. (௨௨௮)

மெழுகுபதமான பின்புவடித்துக்கொண்டு மேன்மையாய் பரணியில்வைத்துமேதான் முழுகிவரபித்தமெங்கே சோகையெ

கே மூலத்தாலேவந்தவியாதியெங்கே, கொழகொழென்றவாயூரல் பித்தமெங்கே கொட்டிபெங்கேதலைகனங்களெங்கேபோச்சு, வழு வழுத்துவாய்க்கசப்புபயித்தமெங்கே மஞ்சள்போல் வாந்தியெங் கேயெண்ணெய்மூழ்கே. (௨௨௯)

எண்ணெயிலேமற்றதெல்லாமிறந்துபோகு மிரண்டுநாட் கொருமுழுக்குவெந்நீரப்பா, வண்ணமிறுமேசமெல்லாம்வாங்கிப் போகுமண்டையிடியொருதலைநோயோடிப்போச்சு, கண்ணெ ரியுநயனதோஷங்கள்போகும் காசமறுங்காதடைப்புகாதிரைச்சல் எண்ணவொண்ணாப்பயித்தியத்தால்வந்தநோயெல்லாம் எண்ணெ ய்கண்டக்ஷிணத்துலேதீருந்தானே. (௨௩௰)

திருமூலர் மையின்பெருமை.

க்ஷிணத்திலேபதினெண்பேர்சித்தராகி சித்தர்மையைச்சொல் லக்கேள்திருமூலர்வைத்த, பணத்திலேமனமினியு மிந்திரகோபம் பாச்சியேகுழியானைப்பத்தும்பாச்சு, தணத்திலேசற்பத்தைக் கட் டித்தூக்கு தன்னையென்றஓம்படத்தில்தயிலம்வீழும், மணத்திலே சமாதியுப்புமண்டையோட்டில் வைத்தரைத்து மைபதனம்பண் ணுவாயே. (௨௩௧)

வாய்ப்பானவண்டகடாகங்களெல்லா மையாலேவெடிக்கும டா ஓம் ஆமென்று, தாய்ப்பானஆயிபதம்பூசைபண்ணு தனிமை யிலேநிதிகாணுந்திருமூலர்மைதான், ஏய்ப்பாகம்போகாது சகல நோயும் இதில்தெரியுமில்லையென்றாற்பறக்குநோய்கள், நாய்ப்பா கல்வித்துழக்குத்தயிலம்வாங்கிரசங்கழஞ்சியிடைகாட்ட மணத்தவ ளைநெய்யே. (௨௩௨)

கோரக்கர் மையின்பெருமை.

மணத்தவளைநெய்யுடனேமங்கைப்பூத்த மலைதாரஞ்சுட்டெ டுத்துமண்டையோட்டில், குணத்துடனேகைதனிலே யிட்டுப்பா ரு கோரக்கர்மைவிபரஞ்சொல்லக்கேளு, பிணத்திலேயயக்கரண் டிகொண்டுநீட்டிப் பிடித்திடுவாய்தலைமகனார் தண்டுநெய்போல் நிணத்திலேரசங்காந்தமிட்டரைத்து நிமிஷத்திற்போட்டிடநிதிகா ண்பீரோ. (௨௩௩)

கருவூரார்மையின்பெருமை.

மையென்னகருவூரார்கழுதைக்கோஷ்டம் மைந்தனேபொ ன்னுடம்பிலடைக்காய்விந்து, கையென்னகொசத்தோடுவிந்தடிக் குக் கண்டெடுத்தார்கிடாரங்கள்கருவூரார்தொழில், செய்தல்லோ பேறுபெற்றார்கருவூர்சித்தர் தீர்க்கமையையாரெடுத்துச் செய்யப் போறார், அய்யனேகொங்கணவர்மையைக்கேளு அகத்திவிரைஉவ ர்க்கடவர்கருவகத்தி, (௨௩௪)

## கொங்கணவர் மையின் பெருமை.

கருவகத்திவிளாகாணவல்லிராகில் காட்டகத்தேகிடந்தமுதற்
காண்பீரப்பா, குருவகத்திநெய்வார்த்துஅம்மிமீதில் குருவிலையா
ய்வாய்நீரால்மதிநீருமேலெகுருவகத்தில்குடியிருப்பார் கோடிகாலம்,
குவலயத்திற்பணம்புதையல்கொள்ளைகொள்ளை, திருவகத்திமாதள
ம்பூவேழும்பூர்த்த தெய்விகமைவேகஞ்செப்புறேனே. (௨௫௫)

செப்புகிறேன்கருவகத்தில்விந்துவாச்சு திறமானவுனக்கதுவு
ங்காவடியாச்சு ஒப்புகிறேன்விந்துகாலடியின்சத்தி உரைநாதம்வி
ட்டாட்டிகுளியணைகருக்கி, மப்புகிறேன்மின்மினியிந்திரகோபம்
மதிமயங்கிப்பச்சோந்திசேர்ந்துதானுல், அப்புகிறென்மனையும
டாவுந்தன்தேகம் அஞ்சனத்தைக்காந்திட்டியாட்டுவாயே.(௨௫௬)

ஆடுவாய்கொங்கணர்மை யதிகம்பாரு அவனியிலேயிதுபு
துமையாகும்பாரு, தேடுவாய்மைச்சுருக்குநோய்களேது செகத்
திலேபேயேதுபிசாசியேது, கூடுவாய்சுழினையிலேகண்டுகூறுசுரு
திமுடிந்திடமதுதான் சொல்லார்சொல்லார், நாடுவார்புருவநடு
மையம்பாரு நாதாந்தபக்ஷணிகொங்கணர்மையாமே. (௨௫௭)

## கயிலாசர் சட்டநாதர் மையின் பெருமை.

மையாமேகயிலாசர்சட்டைநாதன் வாலையுடமைகேளுவழி
யாய்த்தானே, கையாமேயுண்மையடாசமாதியுப்பு கடலுடும்பு
நெய்கூட்டிக்கண்ணில்ப்போடு, மெய்யாமேகடலுள்ளதெல்லாந்
தோன்றும் வீட்டிலேபுதைத்ததெல்லாம்வெளியாய்த்தோன்றும்,
தையாமேமாசியிலேயிட்டுப்பாரு தரணிலிடுந்தனமெடுக்கலகுவி
தாமே. (௨௫௮)

## மச்சமுனி-போகர்-லாடரிஷி-வேதமுனி-ரோமரிஷி-வாசமுனி கமலமுனி-சுந்தராநந்தர்-அகப்பைசித்தர்-அழுகண்ணர் புண்ணாக்கீசர் இவர்களின் மையின் பெருமை.

லகுவிலேமச்சமுனிபோகநாதர் லாடரிஷிரோமரிஷிபுண்ணா
க்கீசர், லகுவிலேவாசமுனிபிர்மசித்திர வேதமுனிகமலமுனி சுந்
திரானந்தர், லகுவிலேயழுகண்ணர்யகப்பைச்சித்தர் லக்ஷம்பேர்
வொருமுகமாய்செய்தமையை, லகுவிலேசொல்லுகிறேன் நோ
ய்க்கெல்லாந்தான் லாடத்தில்விதிமறைக்குமிந்தமையே (௨௫௯)

இந்துப்புயரிதாரம்வூசிக்காந்தம் இதமானகருநாபிபச்சைநா
பி, இந்துப்புபூணையலதுபச்சையோந்தி ரெண்டுரெண்டுகொண்டு
வந்துசெலுத்திவாயில், விந்துப்புவளையலுப்பு சவுட்டுப்போடு
விரமிட்டுகெந்தியிட்டுரெண்டுமொன்றாய், பொந்துக்குள்புதைத்
தெடுத்துத்தயிலம்வாங்கி பூரணமாமுன்னுளாத்தமைகள்சேர(

சேர்த்துமேநோயாளிவீட்டிற்சென்று திருமனையினுட்புகுந்துமுன்னேகேளு, பார்த்துமேநோயின்ன தென்றுந்தோன்றும் பண்ணினவினையில்முன்னு மென்றுதோன்றும், கார்த்துமேகொள்ளு மென்பாரப்போதியும் கனகமென்றதிரவியத்தைக் கையில்வாங்கு, ஏர்த்துமேகோணமென்றுவீட்டினுள்ளே இஷ்டதேவதைக்கெழுதிகட்டுவாயே. (௨௪௧)

கட்டினாலிஷ்டதேவதைகளெல்லாம் கைவல்யமாகுமடா புத்திக்கேட்கும், தெட்டிடவேநோயாளிவீட்டினுள்ளே தீவினைகள் தீருமடாயரைச்சணத்தில், கட்டினால்கட்டிவைத்த மையைத்தொட்டு கண்டுபார்நோயாளிநெற்றிதன்னில், இட்டிடவேபில்லிவஞ்சனையும்போச்சு எதிரோத்தல்மந்திரமும்நோயும்போச்சே. (௨௪௨)

போச்சப்பாமற்றதெல்லாம்நோய்க்கெல்லாந்தான் போட்டிடவேபோமென்று நோயின்பெயரை, பேச்சப்பாபேச்சிடவே போபோவென்று பேசிடவேபிணிபேய்களகலும்பாரு, ஆச்சப்பாபிளவையரையாப்புக்கெல்லாம் அநேகமாய்த்தடவிவிடுதீருந்தீரும், வாச்சரியமில்லையடாமையின்வேகம் மகாபிணிகளடங்குமடாவயித்தியோனே. (௨௪௩)

வகாரவேதையின்பெருமை.

வயித்தியருக்கிதுவேண்டும்பணங்கள்காசு வாங்கலாம்வாதத்துக்குறைக்ககேளு, பயித்தியமேவெள்ளிசெம்பில்தடவிப்போட பற்பமடாசெயபற்பமாகும்பாரு, கஸ்திநீபடவேண்டாஞ் செய பற்பத்தில் கருநெல்லிச்சாறுவிட்டுசெந்தூரிப்பாய், சயித்தியமாய்செந்தூரநவலோகங்கள் தானுருகில்மாவிடவேதங்கமாமே. ()

தங்கத்தைக்கருநெல்லிச்சாறுவிட்டு சந்திரன்போல்சுண்ணமதுதானேயாகும், அங்கத்தில்நாலாயிரம்பிணிக்கு மனுபானம்பா விவிடுபடவேதீரும், சுங்கத்துக்காளாகமாட்டாயப்பா துரைராஜ வயித்தியனும்நீயேயாச்சு, பங்கத்துக்கிடம்வாராதுனக்குத்தானும் பற்பத்தைச்செந்தூரம்பண்ணுவாயே. (௨௪௫)

பண்ணவேதங்கபற்பஞ்சட்டியிட்டு பருதியினில்கடுவெயிலில்வைத்துக்கொண்டு, வெண்ணாவல்சாறுவிட்டுகுச்சுக்கொண்டு விரவியேவெயிலுருகச்செந்தூரந்தான், கண்ணாலேபாற்பதற்குமுடியாதப்பா கதிரவனால்செம்பருத்தம் பூப்போலாச்சு, உண்ணடா சாவில்லைவொருமாப்பாலில் உகாந்தவரைகற்பமடா பிணியதுண்டோ. (௨௪௬)

உண்டானபதினெண்பேர்சித்தரெல்லாம் உண்பார்கள்முனிவரைவுறுதியப்பா, பெண்டாசைகொண்டுசெத்துப்போகாதப்பா பிள்ளைகளேஜகஜாலம்பாருபாரு, கண்டாருங்கேட்டோரு மிந்த

நூலை கண்டாலேயிந்தவகைசெய்யப்போமூர், அண்டர்தேவுலகத்திலிந்தநூலோ ஆயிரத்தியிருநூறுமறிந்துபாரே. (௨௪௭)

ஏவல் பில்லி சூனியத்திற்கு மருந்துலேகியம்.

அறிந்துபார்பேய்களுக்குபிசாசுபூதம் அளவறந்தநோய்களுக்குமேவலுக்கும், பிறிந்துபாரடாதபடிவோடச்செய்யும் பேரின்பமைவேகம் பிள்ளாய்சொன்னேன், முறிந்துபோமுகமாத்திமீடுமாய்கை முடக்குநோய்முட்டேவல்பில்லியெல்லாம், பறிந்துவிடும்புலத்தியனேபண்டிதத்தைப்பார்த்தபேர்சொல்லுவரோ பாரின்மீதே. (௨௪௮)

மீதானமருந்துவகையின்னமுண்டு விளம்புவேன்சூக்ஷாதிமூலமாக, வேதாங்வவிலக்கிவைக்கவிதியைத்தள்ளி விருதுபெற்றசித்தர்கள்மைவிபரஞ்சொன்னேன், மாதாவைப்பூசைசெய்துசாயுச்சியத்தில் வந்திடுங்களென்மக்காள்மாளவேண்டாம், காதாறக்கேளாதேபாவதோஷம் கண்ணூரக்கையாரச்செய்திடாதே. (௨௪௯)

செய்திடாதின்னமொருமருந்துகேளு சிகச்சாலப்பூடொன்றுமயபூடொன்று, தெய்திடாதவற்குமுன்னேமேனிச்சாற்றில் தூருகத்துவாலையிட்டுலர்த்திக்கொண்டு, வைதிடாவதையிடித்துத்தூளாக்கும்போது மைந்தனே துவாலையிட்டுதயிர்குடித்து, செய்திடாயதின்பிறகுபச்சைவெட்டுச் சேர்மானமருந்துவகைச் செப்புறேனே.

பச்சைவெட்டுக்கு ரத்நாங்கதமெழுகு.

செப்புறேன்பச்சைவெட்டுமுன்தூளோடே திரிகடுகுதிரிபலைவாய்விளங்கம், வப்புறேன்கடுகுரோகணியோடோமம் மாசக்காய்சாதிக்காய்வளரிந்துப்பு, ஒப்புறேன்வெந்தயமும்ஓமம்ஏலம் உறுமிளகுசெடிவிளாயும்உளுந்துக்காயம், தப்புறேன்கிளாவிளாகஞ்சாவித்து சம்பவிளாபுளிச்சிவிளாசாமைவித்தே. (௨௫௧)

வித்தானவாளமொடுவெள்ளைப்பூண்டு வேளைவேர்மேனிவேர்அனிசம்வித்து, முத்தானகாரெள்ளுபுன்னைக்காய்வித்து முன்னைவித்துமுருங்கைவித்துக்கூவின்வித்து, பத்தானவெள்ளோடுஆமணக்கன்வித்துபறங்கிபட்டைவேலன்விளாபருத்திவித்து, சித்தகத்திவிளாயோடுநெல்லிப்பருப்புசிறுமுன்னைவேரோடுகொளஞ்சிவித்தே

கொளஞ்சிவித்துநாரத்தம்விளாயும்போடு கொமட்டிவிளாயோடுகொடுவேலிவேரும், வளிஞ்சவன்றிமலைநார்த்தம்விளாயுங்கூட்டிமைந்தனேயெலுமிச்சம்விளாயும்போடு, அளிஞ்சிவிளாகூழ்ப்பாண்டவித்துங்கூட்டி அரிதாரம்வெள்ளைப்பாஷாணம்போடு, தெளிஞ்சகருஞ்சீரகம்பெருஞ்சீரகமும் சீனிசர்க்கரைகருப்புக்கட்டிக்கூட்டே. (௨௫௩)

கூட்டியேதேன்விட்டுசீனிகற்கண்டு கூடவிட்டுசேர்த்திடிப்பாய்மெழுகுபோலே, ஆட்டியேமெழுகெடுத் துண்டைசெய்து

அப்பனேசுண்டக்காயளவுறுட்டி, பூட்டியேகுழாய்தனிலேபதன ம்பண்ணி பூரணமாம்லேகியம்போல்வைத்துக்கொண்டு, நாட்டி யேநாள்பார்த்துச்சுழினைமீதில் நயமாகக்கொண்டிடவேநோய்கள் போமே. (உருச)

திரும்வியாதி.

நோயானமகோதரங்கள்சேர்கைபாண்டு நூதனமாய்க்கொ ண்டுவிடுதிருகடுகுத்தூளில், வாயாலேபத்தியமாயுண்டுதேறு மக நீதானவியாதியெல்லாந்தீருந்தீரும், தீயானகாந்தலதுதணிந்து போகும் சிலேத்துமத்தில்வியாதியெல்லாந்தீருந்தீரும், ஓயாத பிணியெல்லாஞ்சாந்திமாகும் உண்டுவிடுபத்தியமாயுண்டுதேறே()

தேறவேசடத்துள்ளநோக்காடெல்லாம் சென்மித்தகெற்ப நோய்சயங்கள்வாதம், ஆறவேஆறுதநோய்களெல்லாம் ஆனந்த வாயுவுடன் அண்டவாயுவு, மீறவேதிசைவாயுவுபத்துந்தீரும் வி ஷிகடிகாணுக்கடிநீர்விஷிகரப்பன், பாருமேசெங்கரப்பன்கருங்கி ரந்தி பரங்கியெல்லாம்பறக்குமடாபண்புதானே. (உருகூ)

தானென்றகுஷ்டநோவு குஷ்டமோடு தடிதடிப்புஆருப்பு ண்கண்டமாலை, மானென்றமேலெரிவுவெள்ளைமேகம் மைந்த னேகருங்குஷ்டந் தடிப்புமாறும், ஆனென்றசொறிசிரங்குஅரை வெடிப்புண்கள் அங்கத்தின்மெய்யெரிவுகண்காதிற்புண்கள், பா னென்றபச்சைவெட்டால்திருமப்பா பாதகமேசெய்யாதேதரும வானே. (உருஎ)

வானேரியண்டத்திற்பாய்ந்திட்டாலு மலையேறிசடைவளைத் துதிரிந்திட்டாலும், கோனேரியப்பனவனெனக்குச்சொன்னார் குட் டமெட்டுந்தீருமென்றுகுருக்களாணை,மானேந்திசொன்னதோர்ப ச்சைவெட்டு மருந்துமேகற்பம்போலருந்துவாநீ, தானேதான்தி னமொன்றுகடுகுபோலே தருகாமல்மண்டலங்கொள்பிறகுகேளே

கேளடாஎண்பதுநாள்சிறுபயறளவுகேட்டாயோநூற்றியறுப துநாளப்பா, மீளடாமிளகதுபோலாறுமாதம் மிகுந்தகுன்றிவரு ஷிமதுகழித்தாற்கேளு, மூளடாசுண்டைக்காய்வருஷிமூன்றுமுகிந் தபின்புபுன்னைக்காயளவுமகொள்ளு, பாளடாபோகாதுவியாழவட் டம் பருகினால்தேவையில்லைநிரம்பித்திண்ணே. (உருகூ)

திண்ணவேகற்பமது வலுத்துப்போச்சு தேகமதுகற்றூணு மாத்திதங்கம், உண்ணவேயுமிநீரும்பழுக்கும்பாருவுற்றவிந்துசிறு நீரும்வேதையாச்சு, எண்ணவேபெண்ணாசைமட்டும்விட்டு இடும் பமோஆணுவமும்முனையும்விட்டு, பண்ணவேபாஷாணம்நாபிகெந் தி பருகினாற்கொள்ளாதேகெற்பமாச்சே. (உசூ௰)

## மூலிகைகற்பம்அவரிகற்பம்.

ஆச்சடாமூலிகைகற்பங்கேளு அவரியதுதம்பவிசமூலத்தூ
ளாய், வாச்சடாமிளகுமிந்தஅவரித்தூளும் மண்டலந்தானுண்டு
வரவகையைக்கேளு, பேச்சடாவெருகடிதூள்மிளகுபத்தும் பே
ணியேதின்றுநல்லெண்ணெய்மட்டும், ஆச்சடாதள்ளிவிடுவிஷமோ
வில்லை அதனாலேசில்விஷங்களில்லைதானே. (௨௬௧)

## தைவேளைக்கற்பம்.

இல்லையேதைவேளையுலர்த்தித்தூளா யியல்பானமிளகுட
னேயுண்டுவாநீ, குல்லவேதுளசியதுவிடித்துத்தூளாய்க்குணமான
வெந்தியமுந்தின்றுவாநீ, தொல்லையேமகாசுரங்கள் பாண்டுரோ
கஞ் சூலைநீர்சோகைநீரெல்லாந்தீரும், இல்லைவேரிலைத்தூளும்வெ
ந்தியத்தூளும் இடிவெருகொண்டிடவேயூஷ்ணம்போமே. ()

## மேனிகற்பம்

உட்ணமேமேனியதுபொடித்துக்கொண்டு ஓமமுடன்கல
ந்தருந்தவுபாயமப்பா, பட்டிடவேவாயுவெல்லாமகன்றுபோகும்
பாரிசவாயுவேதுவிளபண்டிதோனே, இட்டபடிசூரிசமுமூலத்து
ள்ளே யிசைசீனிக்கலந்துண்ணமேகம்பத்தும், கெட்டியாயோடி
விடும்பொன்னுந்தேகம்கெசபிலமுண்டாகுமப்பாகிருகைதானே.

## சாரணைகற்பம்.

இருகையிலேசாரணைவேர்சமூலம்வாங்கி கிளரவேநிழலுலர்த்
திப்பொடியதாக்கி, வருகையிலேசீனியொடுமிளகுகூட்டு மண்ட
லமேகொண்டுவிடுவாதம்மெல்லாந், திருகையிலேஅகப்பட்டமாத்தூ
ள்போலே சிதறியேயோடிவிடும்க்ஷணத்திற்பாரு, பருகையிலே
வெருகடிதான்மிளகுபத்து பகர்சீனிவெருகடிதான்பார்த்துட்கொ
ள்ளே. (௨௬௪)

## கொடுப்பைகற்பம்.

கொள்ளவேசத்திசாறணைமுன்பாக கொண்டுவரமண்டலமே
குஷ்டமெல்லாம், துள்ளியேயோடிவிடும்கொடுப்பைக்கொள்ள து
ணைவிலக்கும்பகல்நக்ஷத்திரமுங்காணும், மள்ளவேசீந்திகேளக்கி
னிமாந்தம்மகாவூஷ்ணம்பசித்தாகமில்லாதெல்லாம், வள்ளலேயோ
டிவிடுமண்டலத்தில்மைந்தனேநிலவாகைப்பொடிக்கித்தானே. ()

## நிலவாகைகற்பம்.

தானென்றநிலவாகைப்பொடியுஞ்சீனிசர்க்கரையுஞ்சேர்த்தருந்தகு
ன்மமோடும், தேனிலேகுழைத்தருந்தமூளையோடும்திகழான ஆவி
நெய்யிலருந்தினுக்கால், பானென்றவூஷ்ணவாயகலும்பாரு ப
யித்தியவாய்வுநெஞ்செரிவுபாழாமப்பா, கோனென்றதகரைவிரைய
ருந்தினுக்கால் குஷ்டம்விஷக்கடிகுறநோயொழியுந்தானே. ()

### கவுதும்பைகற்பம்.

ஒழியுமேகவுதும்பையுலர்த்தித்தூளாய்ஊட்டிடவேசர்க்கரை யிலுடல்நோய்த்தீரும், விழியுமேபெருந்தும்பையுலர்த்தியோமம் விரைந்திட்டுதின்றிடவேமலச்சாரங்கள், அழியுமேகிருமியொடுநீ றிப்பூச்சு அதிசாரவயிற்றுவலிவகலும்பாரு, கழியுமேகிராணியது நிற்கக்கேளு கையானுமோமத்தூள்களிக்கிண்டாயே. (௨௬௭)

### ஓமத்தூளின்களி.

களிக்கிண்டவென்னீரில்வெல்லஞ்சேர்த்துக்கமகமமேநல்லெ ணெய்க்காசிவிட்டு,வளித்தங்கேநக்கிவிடகிராணியாறும்மைந்தனே காந்தச்செந்தூரத்துண்ணு, விளிக்குமடாகிராணியெல்லா மொ ழிந்துபோச்சு மிதமானபிலனுண்டாமன்னஞ்செல்லும், தெளி க்குமடாதெளிவிக்குஞ்சடலந்தன்னை, செப்புவேன்மூலிகையின்தி றத்தைப்பாரே. (௨௬௮)

திறத்தைப்பார்வயித்தியங்கள் செய்வாயானால் தேசத்தில்கை கொள்ளாருன்னைத்தானும், முறைதப்பாவயித்தியரோ கைபாகங்க ள் முழுதுமேசெய்பாகம்வேண்டுமப்பா, கறைதப்பிசெய்யாதே கர்மியாவாய்க்கடினமுடன்கண்டறிந்துபாருபாரு,அறத்துக்காளா வையடாபிணியைத்தீர்த்தால் அப்பனேகைலாசமடைவாய்பாரே.

அடவாகவின்னமொருமருந்துகேளு ஆயிரத்திருநூற்றிலதி கமாக, விடவிட்டால்வித்தையெல்லாந்தவறிப்போகும் வேதாந் தஞ்சித்தாந்தம்பலியாதப்பா, படபடத்துப்போகாதேதரணிமீதி ல் பாதகங்கள்நிரம்பவடா பதனஞ்சொன்னேன், திடமுணைத்தும னமுறுதிகொண்டுதேறு சித்தாந்தம்வேதாந்தம்திறமாய்க்காணே()

### உப்புகற்பம்.

செயமாகவுப்பொன்றுசொல்லக்கேளு சிறுசின்னிக்கொண்டுவந்து துலாந்தானப்பா, பயமாகநிழலுலர்த்திச்சுட்டுச்சாம்பல் பண்ணி யேபாண்டத்துள்கரைத்துவைத்து, நயமானதெளிவிறுத்துவற்றக் காச்சு நலமானவுப்புவரும்பதனம்பண்ணு, மயமானநோய்களெ ல்லாஞ்சுகபேதிக்கு மைந்தனேபணவிடைதான்கொடுத்துப்பாரே.

கொடுக்கையிலேமலமெங்கேசலக்கட்டெங்கே கூறுனவாய்வெ ங்கேகுன்மமெங்கே, அடுக்கையிலேஷ்லேப்பம்வாதமெங்கே அ க்கினிமாந்தமெங்கேபிடிப்பதெங்கே, கடுக்கையிலேசோகையெ ங்கேபாண்டுவெங்கே காமாலைமஞ்சட்காமாலையெங்கே, படுக்கை யிலேவீக்கமெங்கேநீர்களெங்கே பண்டியிலேநின்றமலமெங்கே போச்சே. (௨௭௰)

போச்சடாபயித்தியவாய்வெல்லாம்போச்சு பொருமலெல் லாமொழிந்துதடாபசியுண்டாகும், ஆச்சடாசரீரசுத்திமிகவுண்டா ச்சு ஆக்கையெல்லாம்வலுத்துதடா வழகுண்டாச்சு, வாச்சுதடாஅ

னுபோகம்பெருக்கமாகும் மைந்தனேசிறுபருவமால்போலாவாய், பேச்சடாசிறுசின்னி யுப்புவேதை பிறருக்குஞ்சொல்லாதே பேதியாமே. (௨௭௩)

வகாரவேதை.

பேதிக்கவகைகேளுசிறுசின்னிவித்தைபேசாதேசொர்பமடா வாதமாகும், நாதிக்கவுப்புமொருபலமெடுத்து நாதவிந்துமத்திச் சுரவியில்வைப்பாய், சாதிக்கச்செந்தூரமுருக்கம்பூப்போல் தளதளனசெந்தூரமாகும்பாரு, வீதிக்கவெள்ளிசெம்புருக்கும்போது வீசமிடபலத்துக்குவேதைபாரோ. (௨௭௪)

வேதையிடச்சொன்னதொருசின்னியுப்பை வெள்ளீயக்கரண்டியிலேபலமிட்டப்பா, தாதைவிந்துதாய்விந்துமொண்டும்விட்டுச் சந்திரலவணமிட்டுரவியில்வைப்பாய், பாகையிதுசென்னீராம்பூரமிட்டுப் பச்சைபுழுகிட்டுமேசெயநீர்தன்னை, வேதையிலேதடவிவிடுவெள்ளிசெம்பு வேதிக்கும்புத்தரைமாற்றுகுந்தானே ; (௨௭௫)

ஆகுமேசெயநீரில்நவலோகங்கள் அப்பனேநீறுமடாகூகைநீர்போல், ஆகுமேயன்னீறுவியாதிபார்த்து அடிக்குமேசருவநோய்வியாதியெல்லாம், போகுமேசெயநீரில்பிணிகளெல்லாம் பொன்வெள்ளிநீறுமடாபோட்டுப்பாரு, சாகுமேசரக்கெல்லாஞ்செயநீராலே க்ஷணத்திலேபாரடாநீறுதானே, (௨௭௬)

நீரிலேநவபாஷாணத்தைவிட்டு நிமிஷத்தில்மெழுகாச்சுவிவையல்லாமல், நீரிலேரசங்கட்டுமணியுமாகும் நினைவாளிநீயானால் முறையைப்பாரு, நீரிலேகெந்தியதுமெழுகுமாச்சு நிச்சயமாய்வயித்தியத்துக்காகுமப்பா, நீரிலேசாதிலிங்கமெழுகுமாச்சு நீற்றினால் செந்தூரலிங்கமாமே. (௨௭௭)

லிங்கத்துநீரதனைநோய்க்குத்தாக்குலிங்கபுத்துத்தீரும்லிங்கச்சூலை, லிங்கத்தின்செந்தூரங்கொடுத்துப்பாரு லெகுவிலேயோனிமூலை லெகுவாமப்பா, அங்கத்தில்வெடிகரப்ப னாயாப்பெல்லாம் ஆற்றுதடாசெயநீறுலிங்கத்தாலே, வங்கத்தைக்குத்திப்பார்நிலைக்குமாற்று வயித்தியனேவாதியடாமுழுதும்பாரோ. (௨௭௮)

அழுகண்ணி தொழுகண்ணிவேதை.

முழுதும்பார்சிறுசின்னியனேகவித்தைமூர்க்கமடாகவர்கோடிவிரியும்பாரு, அழுதும்பார்நிற்குமந்தஅழுகண்ணிக்கு அங்கசாதனங்கேளு அவரைப்பூப்போல், பழுக்கும்பார்மஞ்சள்நிறமாகுமப்பா பண்டிதரோயழுகண்ணிமருந்துகேளு, தொழுதுபார்தொந்தரிக்குந்தொழுகண்ணிக்குச் சொல்லுவேன்பின்னாலேதொகுத்துக்கேளே. (௨௭௯)

தொகுக்கவேயழுகண்ணிகிருணந்தீண்டுஞ் சூரியனிற்சமூலமதுபிடுங்கிவந்து, வருக்கவேதுலாமொன்றுகொண்டுவந்துமைந்த

னேமுன்போலேயுலர்த்திச்சுட்டு,பகுக்கவேபாண்டத்தில்கனாத்து வைத்துப் பருதியினில்தெளிவிறுத்துசெப்புச்சட்டி, நிகுக்கவேய டுப்பேற்றிக்காச்சும்போது நிலவரமாயுப்புவரு நிறத்தைக்காணே.

காணவேயழுகண்ணிலவணப்பூத்தான் கயிலாசங்கொள்ளேய டாகரப்பன்வாதய், தோணவேகொண்டுவிடுகூளாகூளா தொந்தித் தசுரங்களுக்குக்கொடுத்துப்பாரு, வேணபடிமுன்பாகஞ் செய்து பாரு வெகுசுருக்குஅழுகண்ணியதிலுமப்பா,நாணவேதாழுகண் ணியிந்தபாகம் நடத்தப்பாகைவல்யம்வயித்தியோரே. (௨௮௧)

திருசிவேதை.

வயித்தியருக்கின்னமொருசெய்திகேளு மைந்தனேதுருசியொ ருபலமேவாங்கி, செயித்துவிடுமழுகண்ணிதிரோபோகத்தைத் திர ட்டிவைக்கச்சுன்னமடா சுன்னந்தன்னை, அயத்துநீகொள்ளாதே நோய்களுக்குஅணுவளவுகொடுத்திடவேயனுபானங்கேள்,வயித்தி னேபன்னவல்லமூன்றும்போது வந்தநோயெல்லாந்தான் தீருந்தா யனே. (௨௮௨)

தானென்றதொழுகண்ணிதுலாமூஞ்சுட்டுச்சாம்பலாய்க்கனா த்ததிலேதெளிவிறுத்து, மானென்றமுன்போலேயுப்புக்காச்சி வயி த்தியத்துக்கனுபானங்கொடுத்துப்பாரு, ஊனென்றவியாதியெல் லாந்திருந்தீரும் உதிரத்தில்திசைவாயுவுதீருந்தீரும், கோனென்றவி ந்துவிட்டுப்பூரமிட்டுக் குளிர்மதியில்வைத்திடவேசெயநீராமே. ()

செய்நீரில்கருங்கலலும்போட்டுப்பாரு சிவசிவாமெழுகாச்சு வுடனெடுத்தால், வாய்நீரில்நாழிகைத்தான்கிடந்தாற்கல்லும்,மைந் தனேதிருநீருய்ப்போகும்பாரு.தீநீரிலொருசாமமிருந்திட்டாலே திருச்சுன்னம்போல்நீறு விருக்கும்பாரு, தாய்நீரில்விந்துவிட்டுப் பனியில்வைக்கச் சகலசித்தாடுமிதுதாக்கிப்பாரே (௨௮௪)

தாக்கிப்பாராயிரங்காண்டத்துள்ளே தருவானபோகர்மகன் கொங்கணர்தானப்பா, ஆக்கிப்பாருண்டுவரச்சொன்னுனல்லால்அ திலிந்தவாதமுறையடங்காதப்பா, நோக்கிப்பாரழுகண்ணிதொழு கண்ணிக்கு நொடிவித்தைசொல்லுகிறேநூலிதானே, சேர்க்கத்தா ல்போவார்களிதுகண்டல்லோ சுகாதீதமென்பார்கள்சித்தர்பாரே.

அழுகண்ணிக்குழம்பு.

சித்தனேயழுகண்ணிச்சாற்றினுள்ளே சிலவிந்துரசம்விட்டு சேர்த்துக்கொண்டு, பத்தனேமுன்னுப்புமூன்றுஞ்சேர்த்துப்பரு வமாய்க்குழம்பாகவரைத்துக்கொண்டு, கத்தனேநோயெல்லாமி ட்டுப்பாரு கைநொடியில்திருமடாசன்னிதோஷம், பித்தமேசுத்த மாமுச்சிமீது பிடரியிலுந்தேய்த்துவிடுபிறகுபாரே. (௨௮௯)

பிறகென்னபடலங்கள்தீருந்தீரும் பெருமாள்தன்சக்கரமுமி தற்கொவ்வாது ,உறவென்னமகாபுத்தைக்கனாத்துத்தள்ளும்உபாய

மடாபல்லறணைக்கிதனைத்தேய்க்க, விறகென்னபலப்புத்துக்கன்ன
ப்புத்து விலாச்சூலைதனையறுக்கும்நொடியிலப்பா, உறவென்னப
ருவுக்கெல்லாங்காண்டப்புத்துவிக்கத்திற்றடவிவிடு களாயுங்கேளே

கேளடாகுஷ்டநோய்சூலைநோய்புத்து கெற்பத்தில்வந்தெடு
த்தயோனிப்புத்து, கேளடாஆக்கிராணநாசிப்புத்தி குடிகெடுத்த
க்கொடிப்புத்துபீனிசபபுத்து, பாளடாதுளம்பவிதுகார்த்திருக்க
படபடெனக்கரையுமடா புத்தெல்லாந்தான், நாளடாசெல்லாது
நொடியில்தீரும் நமனில்லையிந்திரமாம்ஜாலநூலே. (௨௮௧)

சாலநூல்வயித்தியபாடல்முன்னூர் சாபமில்லைதோஷமில்லை
யீசன்சொன்னூர், ஞாலநூல்நான்சொன்னமுன்னூற்றுள்ளே நல
மிட்டுகர்மசூத்திரத்தைப்பாரு, பாலமாமன்னூலுமின்னூலுங்கண்
டால் பறக்குமடாகர்மகாண்டமுன்னூறுசூஸ்திரம், எனுமேயி
துமுன்னூர்செந்தூரமுன்னூர்யேகமடாஆயிரத்திருநூறுபாரே.()

பாரடாதேசத்திலிந்தகாண்டம் பதனமாம்ஆயிரத்தில்சேர்ந்
ததாலே, ஆரடாயிதுகொடுக்கப்போறூரப்பா அந்தமுன்னூரி
நதமுன்னூர்முன்னூறேடே, நேரடாசேகரிப்பதெந்தநாளோ நீ
பிணிகள்தீர்ப்பதுவுமெந்தநாளோ, சேரடாசேருமடாவிதிதான்
சேர்ந்தால் தேசத்தில்விட்டகுறைகூடுந்தானே (௨௯0)

கிரகசாரம்.

கூடுமடாவயித்தியனேகிரகசாரம் கொள்கிநின்றபடியல்லோ
அனுபோகந்தான் , நாடுமடாஅஷ்டமத்திற்சனியாகாது ராகெ
ன்றகோள்நின்றல்சென்மத்துள்ளே, பாடுமேசோதிரிஷிநூலைப்
பாரு பருதியுடன்புகரிருந்தாலாகாதப்பா, கூடுமேபனிரெண்டி
ல்செவ்வாயோடு துயர்கேதுநின்றல்லோவிதியிதாச்சே. (௨௯௧)

ஆச்சுமேசோதிரிஷிநூலைப்பார்த்து அப்பனேநவக்கிரககக்கி
ஷித்தில், பேச்சுமேசொல்விவைத்த கிரிகைசெய்து, பேசிப்
பார்பூசைவிதியிருநூறேடு, தீட்சைவிதியிருநூற்றிலேகியத்தில்செ
ப்பினேன்வழுவைய துசெப்பவில்லை, பூச்சுமேசிவகளைத்துனுஞ்சே
ர்த்துப் பொசித்துப்பார்காயசித்திபூணும்பாரே. (௨௯௨)

பூணும்பாராயிரத்தன்னூறுள்ளே பூட்டகம்நிரம்பவுண்டுவ
ழலைசேரு, வீணுடனேகுருமறைத்தசூக்ஷமெல்லாம் விருடனேக
ருவுடனேவிடையம்பத்து ஆணுடனேபெண்பாலும் கூட்டினூற்
போல் ஆதியந்தம்சரக்குவைப்புஅழகாமப்பா, நாணுடனேவில்
பூட்டியெய்தமார்க்கம் நான்சொன்னவிந்தவயித்தியமுன்னூறே. ()

சகலரணத்திற்குமருந்து.

மூன்னூறுபுனகளுக்குப் புங்கம்பாலும் மூத்திரம்விட்டரை
த்துவிடுமூன்றுநாளும், பின்னூறுமற்றுதடாகுழிவிழுந்த பெரிய

புலாக்கனுபானம்பேசக்கேளு, கன்னூறுமிளகுவிட்டுப்பொடித்
துக்கொண்டு கலந்துவிடுபுக்கம்பாலமுரியோடு, பொன்னூறுகொ
டுத்தாலுஞ்சொல்லார்சொல்லார் பூட்டிப்பார்புண்புரைகள்புத்து
ந்தானே. (௨௯௪)

புத்தானகருணைக்குங்கல்ப்புத்துக்கும் பூட்டுறேன்காரமடா
மிளகுத்தூளில்,கத்தானதில்லைப்பால்விட்டுக்கொள்வாய்கடிந்தபின்
புநெலநிளமுறுட்டிக்கொண்டு, சித்தானவொருதிரியைவிட்டுப்பா
ரு திரண்டபுத்து அடியோடேசிலமாய்விழும், வித்தானஆதளம்
பால்புங்கம்பாலும் விரவியேசோகித்துப்புண்ணில்ப்போடே. ()

போடவேநாளாறிலாறிப்போகும் பொல்லாதபெருநோயுக்
கெல்லாங்கேளு, சாடவேயனிசம்வினாசெங்கத்தாரி சதாவேரி
செங்கொட்டைசாதிக்காயும், கூடவேயமுரியிலேயூறப்போட்டுக்
கொண்டெடுத்துசிரியநங்கைசிவனார்வேம்பு, நாடவேயிதைசேர்
த்துதூளாய்ப்பண்ணி நலமாகசிலைவடிகட்டுவாயே. (௨௯௫)

கட்டியேசமபாகஞ்சயவீரங்கூட்டி சம்பழச்சாற்விரவியே
காயவைத்து, கெட்டியாமண்டலமேகொண்டாயானால் கேடுகெ
ட்டகுறைநோவுகுட்டமெல்லாம்,விட்டுதேயுடலைவிட்டுவொழிந்து
போச்சு மேனியேதங்கநிறமாகும்பாரு, திட்டியேயொளிதிறக்கு
ங்கற்பமப்பா சித்தர்களேபெயரிதற்குப்பொடியதாமே (௨௯௭)

பொடிதனக்குப்பத்தியமேஆவின்பால்நெய் பூணுமடாமற்
றதெல்லாமாகாதப்பா, வடிதனக்குமன்மதன்போல்வடிவுண்டா
கும் வயித்தியநூல்மண்டலத்தில்வாதிக்காகும், மிடிதுரத்தும்பா
க்கியவானுவானப்பா மேலானவேதாந்தமேவும்மேவும். படிபு
ரக்கும்ஞானியரோசெய்யப்போமுர் பத்திமுத்திவயிராக்கியஞ்சி
வயோகிக்கே. (௨௯௮)

சிவயோகியிந்தநூல்பார்ப்பதற்கு சிவலோகபரத்துவத்தைவி
ரித்துரைப்பேன், அவயோகம்வாசியிலேநிற்கவேண்டும் அவர்மன
தைசுழினையில் நாட்டவேண்டும், பவயோகமும்மலத்தை யறுக்க
வேண்டும்பட்சணியையெப்போதும்பிரிக்கவேண்டும், தவயோக
மானவழியறிந்தபேர்க்குத்தகுதியாமிந்தநூல்முந்நூறுமே. ()

சிவயோகிக்காகுமென்றுஇந்திரசாலம் செப்பினேன்சிவன
றியநூலீயாதே , தவயோகங்கிடையாதுசலிப்பார்சித்தர் தலைவெ
டிக்குஞ்சத்தியமேதரணிமீது, நவகோடிசித்தர்களு மறியமாட்
டார் நாதாந்தவழலைவழிதிறந்துசொன்னேன், அவயோகியாகாதே
வெளியேபோட்டு அலையாதேவயித்தியகாண்டமுற்றே. (௩௱)

அகஸ்தியர் இந்திரஜாலம் ,ஆயிரத்திருநூறில் முதற்காண்டம்
வயித்தியம் முந்நூறு முற்றிற்று.